Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 41
கதிர் : 76

செவ்வாய்க்கிழமை
10 பெப்ரவரி 2026

தை 27 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2057

பக்கங்கள் – 12
விலை – ரூபா 50

## லிட்ரோ எரிவாயு; விலை மாற்றமில்லை!

கொழும்பு, பெப். 10
லிட்ரோ எரிவாயு விலையில் எவ்வித மாற்றமும் இல்லை என்று லிட்ரோ நிறுவனம் அறிவித்துள்ளது.
லாப்ஸ் எரிவாயுவின் அண்மையில் விலை உயர்த் »11



செம்மணிப் புதைகுழியில்

## அடுத்தகட்ட அகழ்வு எப்போது? மார்ச் 16ஆம் திகதி தீர்மானம்!

யாழ்ப்பாணம், பெப்ரவரி 10
செம்மணிப் புதைகுழியில் மூன்றாம்கட்ட அகழ்வுப் பணிகளை முன்னெடுப்பதற்கான திகதி தொடர்பில் மார்ச் மாதம் 16ஆம் திகதி தீர்மானம் எடுக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. »11

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக

## ஊழியர் சங்கப் பிரச்சினை; சுமுகமான முறையில் தீர்வு!

யாழ்ப்பாணம், பெப். 10
யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊழியர் சங்கத்தால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகள் மற்றும் முறைப்பாடுகளுக்கு சுமுகமான முறையில் தீர்வு வழங்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள் »11

## மூன்றாம்கட்ட அகழ்வு எட்டு வாரங்கள் நீளும்

அதற்கான பட்ஜெட் சமர்ப்பிப்பு

யாழ்ப்பாணம், பெப். 10
செம்மணி மனிதப் புதைகுழியில் மூன்றாம் கட்ட அகழ்வுப் பணிகளை மேற்கொள்வதற்கான பட்ஜெட் சட்ட மருத்துவ அதிகாரியால் நீதிமன்றத்தில் நேற்று முன்வைக்கப்பட்டது. »11

## மாகாணத் தேர்தலை நடத்துமாறு இந்தியா விரைவில் தலையிடும்!

ஹரின் பெர்னாண்டோ நம்பிக்கை

கொழும்பு, பெப். 10
மாகாணத் தேர்தலை நடத்துமாறு இந்தியா இலங்கைக்கு அழுத்தம் கொடுக்கும் என்று முன்னாள் அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.
மாகாணத் தேர்தலை »11

## நயினாதீவு - குறிகாட்டுவான் படகுச்சேவை நேரம் மாற்றம்

யாழ்ப்பாணம், பெப். 10
நயினாதீவு குறிகாட்டுவான் இடையேயான தினசரி படகுச்சேவையில், மாலைநேர இறுதிப் படகுச் சேவையின் நேரத்தில் மாற்றம் »11

## ஜனநாயகக் கோசத்தை விடுத்து மாகாணத் தேர்தலை நடத்துங்கள்

அரசுக்கு நாமல் சவால்

விரிவு பக்கம்:-06

கட்டுப்பாட்டை இழந்து

## மோ.சைக்கிள் விபத்து இளைஞர் ஒருவர் பலி

யாழ்ப்பாணம், பெப். 10
வேகக் கட்டுப்பாட்டை இழந்த மோட்டார்சைக்கிள் பனைமரத்துடன் மோதி விபத்துக்கு உள்ளானதில் இளைஞர் ஒருவர் உயிரிழந்தார். இன்னொரு »11

## மணல் கடத்தல் ரூ.50,000 தண்டம்

கிளிநொச்சி, பெப். 10
கிளிநொச்சியில் அனுமதிப் பத்திரம் இன்றி மணல் கடத்திய இருவருக்கு »11

தேசியமட்ட மகளிர் கால்பந்தாட்டம்

## மகாஜன - யூனியன் அணிகள் இறுதியில் நாளை பலப்பரீட்சை

யாழ்ப்பாணம், பெப். 10
தேசிய மட்ட கால்பந்தாட்டத் தொடரில், 14 வயதுக்கு உட்பட்ட பெண்கள் பிரிவில் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியும், தெல்லிப்பழை யூனியன் »11



முச்சந்தி முராரி

"ஆட்டுவித்தால் யாரொருவர் ஆடாதாரோ கண்ணா ...? அப்பிடி ஆட்டுவிக்கிறது இந்தியாதானே வேற யாருமில்லை கண்ணா"

## போக்குவரத்துக்கு இடையூறு பெருமளவு மாடுகள் பிடிப்பு!

புதுக்குடியிருப்பு பிரதேசசபை நடவடிக்கை

புதுக்குடியிருப்பு, பெப். 10
போக்குவரத்துக்கு இடையூறாக வீதிகளில் அலைந்து திரிந்த பெருமளவு கட்டாக்காலி மாடுகள் புதுக்குடியிருப்பு பிரதேசசபையினரால் நேற்றுமுன்தினம் இரவு மடக்கிப்பிடிக் »11



பொன் வசந்தம்



24 கரட் தங்கப் பவுணுக்கு
ரூபாய்
306,000/-
22 கரட் தங்கப் பவுணுக்கு ரூ.296,000/-
இச் சலுகைக் காலம் மட்டுப்படுத்தப்பட்டது
COMMERCIAL BANK
www.combank.lk
Fitch Rating AA-(lka)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கொவிசெத**
திகதி 09.02.2026 | சீட்டிழுப்பு இலக்கம் 4342 | ஆங்கில எழுத்து P
வெற்றி இலக்கங்கள்: 10 17 49 70 | விசேட எழுத்து P

**ஹந்தஹன ராசி சுப பலன்**
திகதி 09.02.2026 | சீட்டிழுப்பு இலக்கம் 1409 | வெற்றி இலக்கினம் மகரம்
வெற்றி இலக்கங்கள்: 11 28 33 60

**NLB ஜய**
திகதி 09.02.2026 | சீட்டிழுப்பு இலக்கம் 0368 | ஆங்கில எழுத்து X
வெற்றி இலக்கங்கள்: 6 6 0 4

**மெகா பவர்**
திகதி 09.02.2026 | சீட்டிழுப்பு இலக்கம் 2448 | ஆங்கில எழுத்து U | சுப்பர் இலக்கம் 25
வெற்றி இலக்கங்கள்: 05 08 30 50

**மஹஜன சம்பத**
திகதி 09.02.2026 | சீட்டிழுப்பு இலக்கம் 6100 | ஆங்கில எழுத்து F
வெற்றி இலக்கங்கள்: 2 7 8 1 3 0

**தன நிதானய**
திகதி 09.02.2026 | சீட்டிழுப்பு இலக்கம் 2130 | ஆங்கில எழுத்து S
வெற்றி இலக்கங்கள்: 14 22 48 69 | விசேட எழுத்து S

**சுப தவசக்**
திகதி 09.02.2026 | சீட்டிழுப்பு இலக்கம் 0216 | வெற்றி இலக்கினம் கன்னி
வெற்றி இலக்கங்கள்: 41 47 64

# திருமலை புத்தர் சிலை விவகாரம்; 10 பேரின் மறியல் மீண்டும் நீடிப்பு

திருகோணமலை, பெப்.10
திருகோணமலை கடற்கரையில் புத்தர் சிலையை வைத்த விவகாரம் தொடர்பில், விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள 4 பிக்குகள் உள்ளிட்ட 10 பேரினதும் விளக்கமறியல் நாளைவரை மீண்டும் நீடிக்கப்பட்டுள்ளது.
இந்த வழக்கு திருகோணமலை மேல் நீதிமன்றில் நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோதே, விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது.
திருகோணமலை நீதிவான் நீதிமன்றில் பிணை மறுக்கப்பட்ட நிலையில், பிரதிவாதிகள் சார்பில் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் பிணை மனுத்தாக்கல் செய்யப்பட்டது. அந்த மனுக்கள், கடந்த 3 ஆம் திகதியன்று நிராக்கப்பட்டன. அதையடுத்து பிணைமனுக்கோரிக்கை திருகோணமலை மேல் நீதிமன்றில் நேற்றுத் தாக்கல் செய்யப்பட்டது. எனினும், பிணை மனுக்கள் நிராகரிக்கப்பட்டு விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது. (க)

**சுபிரி தன சம்பத**
திகதி 09.02.2026 | தினம் திங்கட்கிழமை | வெற்றி வாரம் 0808
ஆங்கில எழுத்து X | வெற்றி இலக்கம் 6 4 8 8 5 7

**Super Ball**
திகதி 09.02.2026 | தினம் திங்கட்கிழமை
சீட்டிழுப்பு வாரம் 3074 | ஆங்கில எழுத்து I | வெற்றி இலக்கம் 09 24 34 38

**சனிதா**
திகதி 09.02.2026 | தினம் திங்கட்கிழமை
ஆங்கில எழுத்து C | வெற்றி இலக்கம் 06 34 39 50 | வெற்றி வாரம் 5235

**SASIRI**
திகதி 09.02.2026 | தினம் திங்கட்கிழமை
வெற்றி வாரம் 0904 | வெற்றி இலக்கம் 04 23 29

**லக்ன ராசி**
திகதி 09.02.2026 | தினம் திங்கட்கிழமை
சிம்மம் | வெற்றி இலக்கம் 09 18 20 38 | சீட்டிழுப்பு வாரம் 4786

**KAPRUKA**
திகதி 09.02.2026 | தினம் திங்கட்கிழமை
ஆங்கில எழுத்து O | சுப்பர் இலக்கம் 38 | வெற்றி இலக்கம் 41 44 60 64 | வெற்றி வாரம் 2250

**அத கோடிபதி**
திகதி 09.02.2026 | தினம் திங்கட்கிழமை
ஆங்கில எழுத்து W | வெற்றி இலக்கம் 10 25 55 62 | வெற்றி வாரம் 2900



## 5 நாள்களைக் கடந்தது மீனவர்கள் போராட்டம்

கொழும்பு,பெப்.10
ஜனாதிபதி செயலகத்துக்கு முன்பாக, மீனவர்களால் முன்னெடுக்கப்பட்டுவரும், சத்தியாக்கிரகப் போராட்டம் நேற்றுடன் ஐந்தாவது நாளாகவும் எவ்விதத் தீர்வுகளுமின்றித் தொடர்கின்றது. உழவு இயந்திரங்களில் (Tractors) பொருத்தப்பட்ட வின்ச் (Winch) இயந்திரங்களைப் பயன்படுத்தி, மீன் பிடியில் ஈடுபடுவதற்கு விதிக்கப்பட்டுள்ள தடையை நீக்குமாறு கோரி, கடந்த 5ஆம் திகதி முதல் மீனவர்கள் போராட்டத்தை ஆரம்பித்தனர்.
இந்தப் போராட்டத்தின்போது, கடற்றொழில் திணைக்கள அதிகாரிகள் மற்றும் ஜனாதிபதி செயலக உயரதிகாரிகளுடன் பலமுறை பேச்சுக்கள் நடத்தப்பட்டன. எனினும் இணக்கப்பாடு எட்டப்படாத நிலையில், தங்களது கோரிக்கைகள் நிறைவேறும் வரை போராட்டத்தைக் கைவிடப்போவதில்லை என்று மீனவர்கள் அறிவித்துள்ளனர். (க)

## குடியிருப்பாளர் பாதுகாப்புச் சட்டம் மறுபரிசீலனை செய்யத் தீர்மானம்

கொழும்பு, பெப்.10
நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள 'குடியிருப்பாளர்கள் பாதுகாப்பு சட்ட வரைவை மறு பரிசீலனை செய்ய அரசாங்கம் தீர்மானித்துள்ளது என்று சட்டமா அதிபர் நேற்று உயர் நீதிமன்றத்துக்கு அறிவித்துள்ளார்.



இந்தச் சட்டவரைவு அரசியலமைப்பால் உறுதிப்படுத்தப்பட்டுள்ள அடிப்படை உரிமைகளை மீறுகின்றது என்று தெரிவித்து தாக்கல் செய்யப்பட்ட மனுக்கள் நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போதே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.
இந்தச் சட்டவரைவு தொடர்பாக பொதுமக்களின் ஆலோசனைகள் மற்றும் முன்மொழிவுகளைப் பெற்றுக்கொள்வதற்காக எதிர்வரும் 3ஆம் திகதி முதல் ஒரு மாத கால அவகாசத்தை நீதி அமைச்சர் வழங்கியுள்ளார். அரசாங்கம் அதை மறுபரிசீலனை செய்ய முன்வந்துள்ளதால், இதுதொடர்பாக தாக்கல் செய்யப்பட்டிருந்த மனுக்களின் விசாரணையை முடிவுக்குக்கொண்டுவர உயர்நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.
வீட்டு உரிமையாளர்களால் வாடகைக்கு குடியிருப்பவர்களின் நீர், மின்சார விநியோகத்தைத் துண்டிப்பதையோ அல்லது பலவந்தமாக வெளியேற்றுவதையோ தடுப்பதே இந்தச் சட்டத்தின் நோக்கம் என்று தெரிவிக்கப்படுகின்றது. ஆயினும் இந்தச் சட்டவரைவு நில உரிமையாளர்களின் உரிமைகளைப் பாதிக்கின்றது என்ற அதிருப்திகளும் வெளியிடப்பட்டுள்ளன. (எ-இ)

## யோஷித, டெய்சி வழக்கு ஏப்ரல் மாதத்திற்கு ஒத்திவைப்பு

கொழும்பு, பெப்.10
முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவின் மகன் யோஷித ராஜபக்ச மற்றும் அவரது பாட்டி டெய்சி பொரஸ்ட் ஆகியோருக்கு எதிராக சட்டமா அதிபர் தாக்கல் செய்த வழக்கை எதிர்வரும் ஏப்ரல் மாதம் 24ஆம் திகதி மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ள கொழும்பு மேல் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டது.
இந்த வழக்கு கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி ரஷ்மி சிங்கப்புலி முன்னிலையில் நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டது. பணமோசடித் தடுப்புச் சட்டத்தின்கீழ் குற்றம் சாட்டப்பட்டு இருவருக்கும் எதிராக வழக்குத் தொடரப்பட்டுள்ளது.
பிரதிவாதிகள் சார்பில் முன்னிலையான வழக்கறிஞர் ஆஸ்வால்ட் பெரேரா, பிரதிவாதியான டெய்சி பொரஸ்ட் விசாரணையைத் தாங்கும் அளவுக்கு மனரீதியாகத் தகுதியானவரா என்பது தொடர்பில் கொழும்பு நீதித்துறை மருத்துவ அதிகாரி மூலம் கோரப்பட்ட நிபுணர் மருத்துவ அறிக்கை இன்னும் பெறப்படவில்லை என்று நீதிமன்றத்தில் தெரிவித்தார்.
தொடர்புடைய அறிக்கை கிடைக்கும் வரை வழக்கை விசாரிக்க வேறு திகதியை வழங்கவேண்டும் என்று அவர் நீதிமன்றத்தைக் கோரினார். முன்வைக்கப்பட்ட கருத்துகளைப் பரிசீலித்த நீதிபதி, வழக்கை எதிர்வரும் ஏப்ரல் மாதம் 24 ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார். (எ-இ)

## ஈ-விசாவுக்கு எதிரான மனு; மார்ச் 25 இல் விசாரணை

கொழும்பு, பெப்.10
கடந்த அரசாங்கத்தில் ஈ-விசா வழங்கும் செயல்முறையை 2 தனியார் நிறுவனங்களுக்கு மாற்ற அப்போதைய அமைச்சரவை எடுத்த முடிவை இரத்துச்செய்ய உத்தரவிடக் கோரி தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமைகள் மனுவை அடுத்த மாதம் 25ஆம் திகதி மீண்டும் கூட்ட உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.
பிரதம நீதியரசர் பிரீதி பத்மன் சூரசேன, ஷிரான் குணரத்ன மற்றும் அச்சல வெங்கப்புலி ஆகிய மூவர் கொண்ட உயர் நீதிமன்ற நீதிபதிகள் அமர்வு முன்னிலையில் இந்த மனு நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டது.
முன்வைக்கப்பட்ட கருத்துகளைப் பரிசீலித்த உயர் நீதிமன்ற அமர்வு, அந்தக் கருத்துகளை உறுதிப்படுத்த எதிர்வரும் மார்ச் மாதம் 25ஆம் திகதி மீண்டும் மனுவை விசாரிக்க உத்தரவிட்டது. (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





டித்வா புயலால்

# அழிந்த பண்ணைகளுக்கு ரூ.3.2 பில்லியன் இழப்பீடு

யாழ்ப்பாணம்,பெப்.10
டித்வா புயலால் அழிவடைந்த பண்ணைகளின் உரிமையாளர்களுக்கு 3.2 பில்லியன் ரூபா இழப்பீடு வழங்கப்பட்டுள்ளது என்று கமத்தொழில் மற்றும் கால்நடை வளங்கள் பிரதி அமைச்சர் நாமல் கருணாரத்ன தெரிவித்துள்ளார்.
தேசிய கால்நடை அனர்த்தத்துக்குப் பிந்தைய அவசர தடுப்பூசித் திட்டத்தின் தொடக்க விழாவின் பின்னர் ஊடகங்களுக்கு அவர் இதனைத் தெரிவித்தார். மாடுகள், பன்றிகள், ஆடுகள், புரொய்லர் கோழிகள் என அழிவடைந்த பண்ணைகளுக்கு இந்த இழப்பீடு வழங்கப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார். (க)






## மின்சார வேலியை உடைத்து ஊருக்குள் புகும் யானைகள்

மட்டக்களப்பு,பெப்.10
மண்முனை மேற்குப் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட கண்டியனாறுப் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள மின்சாரவேலியை உடைத்துத் தள்ளி, சுமார் நூற்றுக் கணக்கான காட்டுயானைகள் மக்கள் குடியிருக்கும் பகுதியை நோக்கிப் படையெடுத்துள்ளன.
இதனால் அந்தப் பகுதி மக்கள் தினமும் அச்சுத்துடன் உள்ளனர். வன ஜீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தினரும் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு காட்டு யானைகளைத் துரத்தும் பணியை முன்னெடுத்து வருகின்றனர். எனினும் யானைகளைக் கட்டுப்படுத்த முடியவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது. (க)

## தேடுதல்களில் 594 பேர் கைது

கொழும்பு, பெப்.10
நாடளாவிய ரீதியில் நேற்றுமுன்தினம் பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்புகளில் 594 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.
28 ஆயிரத்து 56 பேர் சோதனைக்குட்படுத்தப்பட்டுள்ளனர்.
கைதுசெய்ய பிறப்பிக்கப்பட்ட பிடியாணைகளுக்கமைய 259 பேரும், திறந்த பிடியாணைகளுக்கமைய 147 பேரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.
இதேவேளை, மதுபோதையில் வாகனம் செலுத்திய 422 பேரும், கவனக்குறைவாக வாகனம் செலுத்திய 66 பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (எ-இ)



## மோட்டார் குண்டுகள் மீட்பு

களுத்துறை, பெப்.10
களுத்துறை சென்ரல் சந்தியில் பெரக்கும் மாவத்தை பகுதியில் உள்ள ஒரு வீட்டுத் தோட்டத்தில் மோட்டார் குண்டுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.
வீடு கட்டுவதற்காக இந்தக் காணியைத் துப்புரவு செய்யும் வேளையில் மோட்டார் குண்டுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர். (எ-இ)

## மகா சிவராத்திரி விசேட வழிபாடு

யாழ்ப்பாணம், பெப்.10
மகா சிவராத்திரி விரதத்தை முன்னிட்டு, பருத்தித்துறை சிவன் கோவிலில், எதிர்வரும் 15ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 6 மணி முதல் மறுநாள் காலை வரை விசேட அபிசேகம் மற்றும் விசேட பூசை வழிபாடுகள் இடம்பெறும். அன்றைய தினம் காலை 6 மணிக்கு உஷக்காலப் பூசையுடன் வழிபாடுகள் ஆரம்பமாகி, மாலை 6 மணிக்கு ஸ்நபன அபிசேகம் என்பன இடம்பெறும். சிவராத்திரி முதலாம் சாமப்பூசை இரவு 7 மணிக்கும், ஸ்நபன அபிசேகம் இரவு 9.30 மணிக்கும், இரண்டாம் சாமப்பூசை இரவு 11 மணிக்கும் இடம்பெறும். இலிங்கோற்பவக் காலத்தைத் தொடர்ந்து நள்ளிரவு 12 மணிக்கு வசந்தமண்டபப் பூசை இடம்பெற்று, பெருமான் பர்வத பத்தினி சமேதராக வீதி உலா வருவார். மறுநாள் திங்கட்கிழமை காலை 6 மணிக்கு உஷக்காலப் பூசை (பாறணைப்பூசை) இடம்பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (க-100)

## வெடிபொருள்கள் மீட்பு

கிளிநொச்சி, பெப்.10
இரணைமடுக்குளத்துக்கு அருகில் பனங்கண்டி செல்லும் பிரதான வீதியில் கைக்குண்டு ஒன்றும், மோட்டார் செல் ஒன்றும் இனங்காணப்பட்டுள்ளது.
அண்மையில் பெய்த மழையால் இவை வெளித்தெரிந்த நிலையில், இராணுவ புலனாய்வுப் பிரிவினர் அவற்றை இனங்கண்டுள்ளனர். அவற்றைப் பாதுகாப்பாக அகற்றுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (எ-113)

## பூமராங் சட்டம்!

ஒஸ்ரேலியாவில உள்ள பழங்குடிச் சனத்திட்ட பூமராங் எண்ட ஆயுதம் இருக்கு. அதை எறிஞ்சா தன்ர இலக்கைத் தாக்கிப்போட்டு, எறிஞ்சவரிட்டையே திருப்பிவரும். அப்பிடி பூமராங் திரும்பி வரேக்கையும் அதைப் பிடிக்கிறதுக்கு ஒரு ரெக்னிக் இருக்கு. மாத்திக் கீத்திப் பிடிச்சால் எறிஞ்சவரையும் அது போட்டுத் தாக்கத் தயங்காது. அப்பிடி திசைகாட்டிக்காரர் கொண்டந்த சட்டமே இப்ப அவைக்கு பூமராங் மாதிரி திருப்பியடிக்கத் தொடங்கியிருக்கு. திசைகாட்டி அரசாங்கம் கொண்டுவந்த 'எம்.பி.க்களின் ஓய்வூதிய ரத்து' சட்டமூலத்துக்கு உயர்நீதிமன்றம் பச்சைக்கொடி காட்டிட்டுது. 'இது அரசியலமைப்புக்கு முரணில்லை, சாதாரண மெஜாரிட்டியோட நிறைவேற்றலாம்' எண்டு தீர்ப்பு வந்தகையோட, மற்றக் கட்சிக்காரரை விடவும், ஜே.வி.பி.யின்ர முன்னாள் எம்.பி.க்களுக்குத்தான் கலக்கமாக் கிடக்குதாம். இனியும் விட்டால் பிழை எண்டிட்டு அவை உந்தச் சட்டம் வந்தால், தங்களுக்கு வாற நட்டத்தை கட்சிதான் ஈடுகட்டோணும் எண்டு முரண்டு பிடிக்கத் தொடங்கியிருக்கினமாம்.

ஏனெண்டால், ஜே.வி.பி-யில ஒரு விசித்திரமான 'ரூல்ஸ்' இருக்கு. ஆராவது அந்தக் கட்சியில இருந்து எம்.பி.யாத் தெரிவானால், அவையின்ர முழுச் சம்பளத்தையும் கட்சிப் பெட்டியிலதான் கொட்டோணும். கட்சி அதுக்கயிருந்து 'மட்டுமட்டுக்கு' ஒரு தொகையைத்தான் அந்த மெம்பருக்குக் குடுக்கும். இதால எம்.பி.யாக இருந்தாலும் அவையள் சாதாரண மெம்பர் மாதிரித்தான் வாழலாம். 'நானும் எம்.பி.தான்' எண்டெல்லாம் பந்தா காட்டுற வேலை ஜே.வி.பி.யில நடக்காது. அதால எம்.பி. பதவியால வாற சம்பளத்தை வைச்சு, சொத்துச்சுகம் சேர்க்கிறதெண்டது ஜே.வி.பி.க்காரருக்கு ஜென்மத்திலையும் நடக்காத காரியம். ஜே.வி.பி.யின்ர முன்னாள் எம்.பி.க்களுக்கு இருந்த ஒரே ஒரு நப்பாசை என்னவெண்டால், 'பதவி போன பிறகு வாற பெஞ்சன் காசை வைச்சு நிம்மதியாக் காலந்தள்ளலாம்' எண்டதுதான்.

இப்ப அநுர அரசாங்கம் அதையும் நிப்பாட்டப் பார்க்கவும், பழைய ஜே.வி.பி. எம்.பி.க்கள் இப்ப 'பொறுத்தது போதும், பொங்கியெழு' எண்டமாதிரி கட்சிக்கு எதிராப் போர்க்கொடி தூக்கியிருக்கினமாம். 'பதவியில இருக்கேக்க சம்பளத்தையும் பிடுங்கிக் கொண்டு, இப்ப பெஞ்சனையும் நிப்பாட்டினால் நாங்கள் றோட்டில நிண்டு பிச்சையா எடுக்கிறது?' எண்டு அவை எகிறுகினம். எங்களிட்ட இருந்து பிடுங்கின சம்பளக் காசை வட்டியோட திருப்பிக் குடுக்கோணும், இல்லாட்டி 'கோர்ட்டு' படி ஏறுவம் எண்டு சொந்தக் கட்சிக்கே இப்ப 'ஆப்பு' வைக்கிற வேலையில அந்த முன்னாள் எம்.பி.க்கள் இறங்கியிருக்கினம். ஊருக்கு நல்லபிள்ளை வேசம் போட வெளிக்கிட்டு, மற்றவையின்ர பெஞ்சனை வெட்டப்போன ஜே.வி.பி.க்காரருக்கு இப்ப அவையின்ர வீட்டுக்குள்ளயே 'புகைச்சல்' கிளம்பிட்டுது. 'மாற்றம் மாற்றம்' எண்டு சொல்லிப் போட்டு, இப்ப தங்களுக்குள்ளயே 'காசுப் பிரச்சினையால' அடிபடுறதும் அவையின்ர அகராதியில மாற்றம் போலதான் கிடக்குது கண்டியளோ.

padsi@uthayan.com - பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தேசிய சாதனை படைத்த மாணவர்கள் கௌரவிப்பு



மன்னார், பெப்.10

தேசிய ரீதியில் பாடசாலைகளுக்கு இடையிலான உதை பந்தாட்ட இறுதிப்போட்டியில், 20 வயது ஆண்கள் பிரிவில், 2ஆம் இடத்தைப் பெற்ற மன்.புனித சவேரியார் ஆண்கள் கல்லூரி வீரர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு மன்னார் பேருந்து நிலையப் பகுதியில் நேற்று இடம் பெற்றது.

மன்.புனித சவேரியார் ஆண்கள் கல்லூரி மற்றும் கொழும்பு ஹமீட் அல் ஹுசேனியா அணிகள் மோதிய போட்டியில், ஹமீட் அல் ஹுசேனியா 10 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. இப்போட்டியில் சவேரியார் ஆண்கள் கல்லூரி அகில இலங்கை ரீதியில் இரண்டாம் இடத்தைப் பெற்றது. இவ்விளையாட்டு வீரர்களை வரவேற்று கௌரவிக்கும் நிகழ்வு, பாடசாலையின் அதிபர் அருட்சகோதரர் சந்தியாகு தலைமையில் இடம்பெற்றது. வீரர்கள் மாலை அணிவித்து, ஊர்வலமாக பாடசாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். நிகழ்வில் மன்னார் நகரப் பிரதேச செயலர், வலயக்கல்விப் பணிப்பாளர், பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள்,பெற்றோர், பழைய மாணவர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். (க-56)

## பருத்தித்துறை புனித லூர்து மாதா திருத்தலநற்கருணைத்திருவிழா

பருத்தித்துறை தும்பளை புனித லூர்து மாதா திருத்தலத் திருவிழாவின் திவ்விய நற்கருணை விழாத் திருப்பலி இன்று செவ்வாய்க்கிழமை மாலை இடம் பெறவுள்ளது. திருவிழாவின் நவநாள் வழிபாடுகள் கடந்த 2ஆம் திகதி ஆரம்பமாகிய நிலையில் இன்று மாலை மற்றும் நாளை காலை திருவிழாத் திருப்பலிகள் ஒப்புக்கொடுக்கப்படவுள்ளன.

யாழ்.மறை மாவட்ட குருமுதல்வர் அருட்கலாநிதி பி.ஜெ.ஜெபரட்ணம் அடிகளார் தலைமையில் இன்று மாலை 5மணியளவில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு ஆராதனை இடம்பெற்று ஆசி வழங்கப்படும். நாளை புதன்கிழமை அதிகாலை 5.30 மணி மற்றும் 7மணிக்குத் திருவிழாத் திருப்பலிகள் ஒப்புக் கொடுக்கப்படும். திருவிழாத் திருப்பலியை யாழ்.மறை மாவட்ட ஆயர் பேரருட்திரு ஜஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை தலைமைதாங்கி ஒப்புக் கொடுப்பார். திருப்பலியின் நிறைவில் புனித லூர்து அன்னையின் திருச்சொரூபப் பவனி இடம் பெற்று ஆசீர்வாதம் வழங்கப் படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-41-100)

## கலைஞனின் குரல் இதழ் வெளியீடு

யாழ்ப்பாணம், பெப்.10

முத்தமிழ் கலைஞர் மேம்பாட்டு மன்றத்தின் வெளியீடான 'கலைஞனின் குரல்' இதழ் 7 வெளியீட்டு விழா புனித சாள்ஸ் மகாவித்தியாலயத்தில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது.

எழுத்தாளர் ஜோசப் பாலாவின் பவளவிழாவைச் சிறப்பிக்கும் முகமாக இந்த நூல் வெளிவந்தமை குறிப்பிடத்தக்கது. மன்றத்தின் தலைவர் இரா. மதிகரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் சிறப்புரையை முல்லை கலைஞர் சு.ஜெயராசசிங்கமும், வெளியீட்டுரையினை மட்டக்களப்பு தேசிய கல்வியியற் கல்லூரி விரிவுரையாளரும் 'காந்தீயம்' பத்திரிகை ஆசிரியருமான எம். ஷாந்தன் சக்தியகீர்த்தியும் ஆற்றினர். நிகழ்வில் கலாபூசணம் கா. தில்லையம்பலம் உட்பட மூத்த பல கலைஞர்கள் கலந்துகொண்டனர். (41-159)

## சொற்பொழிவு

யாழ்ப்பாணம், பெப்.10

சைவ வாழ்வியலில் திருவிளையாடற்புராணம் பெறும் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும்முகமாக வாராந்தத் திருவிளையாடற்புராணச் சிறப்புச் சொற்பொழிவுத்தொடர் தெல்லிப்பழை மாவை கலட்டி அருள்மிகு நாகதம்பிரான் தேவஸ்தானத்தில் எதிர்வரும் 13ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 4மணிக்கு நடைபெறவுள்ளது.

சிவநெறிப்பிரகாசர் சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கம் நடத்தும் நிகழ்வில் பரஞ்சோதிமுனிவர் குருபூஜையை அடுத்து மாணவர்களின் கலைநிகழ்வும், சைவப்புலவர் பிரசங்கச் சக்கரவர்த்தி சி.கா.கமலநாதனின் 'கீரனுக்குக் கிலக்கணமுபதேசித்த படலம்' எனும் பொருளில் சொற்பொழிவும் இடம்பெறும்.

சொற்பொழிவிலிருந்து மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டுப் பாராட்டுப்பரிசில்கள் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-41)

## இன்றைய ராசி உங்களுக்கு எப்படி?

**மேடம்:** காரியங்கள் அனுகூலமாகமுடியும். தந்தையின் நீண்டநாள் விருப்பத்தை நிறைவேற்றி மகிழ்வீர்கள். எதிர்காலத்துக்குப் பயன்தரும் வகையில் முக்கியமான பிரமுகர்களின் அறிமுகம் கிடைக்கும்.

**இடபம்:** தாயின் அன்பும் ஆதரவும் கிடைக்கும். வாழ்க்கைத்துணையின் தேவைகளை மகிழ்ச்சியுடன் நிறைவேற்றுவீர்கள்.சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கும் திடீர் செலவுகளுக்கும் வாய்ப்பு உண்டு.

**மிதுனம்:** புதிய முயற்சிகளைப் பிற்பகலுக்கு மேல் தொடங்குவது சாதகமாகமுடியும். பிள்ளைகள் கேட்டதை வாங்கிக்கொடுப்பீர்கள். உறவினர்கள்மூலம் பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. நண்பர்கள் மூலம் மகிழ்ச்சி தரும் செய்தி கிடைக்கும்.

**கடகம்:** மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும். எதிர்பார்த்த காரியங்கள் அனுகூலமாகமுடியும். வாழ்க்கைத்துணையுடன் ஏற்பட்டிருந்த மன வருத்தங்கள் நீங்கும்.

**சிம்மம்:** தாய்வழி உறவுகளிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். வாழ்க்கைத்துணை உங்கள் முயற்சிகளுக்கு ஒத்துழைப்புத் தருவார். அவர்மூலம் தேவையான உதவிகளும் கிடைக்கும்.

**கன்னி:** சகோதரர்களின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள். மாலையில் உறவினர்கள்மூலம் கிடைக்கும் செய்தி அளவற்ற மகிழ்ச்சி தருவதாக இருக்கும்.

**துலாம்:** திடீர்ச்செலவுகள் ஏற்படும். தேவையான பணம் இருப்பதால் சமாளித்துவிடுவீர்கள். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும்.

**விருச்சிகம்:** மனதில் இனந்தெரியாத சோர்வு ஏற்படக்கூடும். வாழ்க்கைத்துணைவழியில் செலவுகள் ஏற்படும். எதிர்பார்த்த பணம் கிடைப்பதில் தாமதம் ஏற்படும்.

**தனுசு:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும் நாள். தந்தைவழியில் ஆதாயம் கிடைப்பதுடன் செலவுகளும் ஏற்படும். மறைமுக எதிர்ப்புகள் விலகும்.

**மகரம்:** சகோதரர்களால் சில சங்கடங்கள் உண்டாகும். எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். சிலருக்குத் தெய்வப்பணிகளில் பங்கேற்கும் வாய்ப்பு ஏற்படும்.

**கும்பம்:** மகிழ்ச்சியான நாள். மன உறுதியுடன் செயற்படுவீர்கள். எதிர்பாராத பண இலாபம் உண்டாகும். வாழ்க்கைத் துணையால் மகிழ்ச்சி உண்டாகும்.

**மீனம்:** புதிய முயற்சிகள் எதிலும் ஈடுபட வேண்டாம். உடல்ஆரோக்கியத்தில்கவனம் தேவை. சிலருக்குத் தாய்வழியில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

உண்மை - நேர்மை - அஞ்சாமை




## வெளிக்கிளம்பும் இனவாதப்பூதம்...!

ஸ்ரீலங்காவின் சுதந்திரதினத்தைக் கரிநாளாக அறிவித்து, போராட்டங்களையும் பேரணிகளையும் முன்னெடுத்தவர்களுக்கு எதிராகக் கடும் நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் முக்கியஸ்தரும், முன்னாள் இராஜாங்க அமைச்சருமான இந்திக்க அனுருத்த. ஸ்ரீலங்காவின் சுதந்திர தினத்தை கரிநாளாக அறிவித்ததும், போராட்டங்களை நடத்தியதும், பேரணிகளை முன்னெடுத்ததும் இனவாதச் செயற்பாடுகள் என்றும் அவர் சாடியுள்ளார். இலங்கையில் இனவாதத்தை ஏற்படுத்தியேனும் மீண்டும் ஆட்சியைக் கைப்பற்றிவிட வேண்டும் என்பதில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன எவ்வளவுதூரம் விடாப்பிடியாக உள்ளது என்பதற்கு, இந்திக்க அனுருத்தவின் கருத்துகள் காலக் கண்ணாடியாக அமைந்துள்ளன.

இலங்கையின் சுதந்திரதினத்தை கரிநாளாக அறிவிக்கவேண்டும் என்பதும், போராட்டங்கள், பேரணிகளை முன்னெடுப்பதும் தமிழர்களின் தீராத விருப்பு அல்ல. இந்த நடவடிக்கைகள் அனைத்துமே எங்கள்மீதுதிணிக்கப்பட்டிருக்கும்அடக்குமுறையின் வெளிப்பாடாகவும், நீதிமறுப்பின் பிரதிபலிப்பாகவுமே அமைந்திருக்கின்றன. காணாமல் ஆக்கப்பட்டோருக்கு என்ன நடந்தது என வெளிப்படுத்தப்படவேண்டும், அரசியற்கைதிகள் விடுவிக்கப்படவேண்டும், காணிகளில் இருந்து இராணுவம் வெளியேறவேண்டும், பௌத்த மயமாக்கல்கள் கைவிடப்படவேண்டும், பயங்கரவாதத் தடைச் சட்டம் முற்றாக நீக்கப்படவேண்டும், இனப்படுகொலைக்குக் காரணமானவர்கள் சர்வதேச விசாரணை ஊடாகத் தண்டிக்கப்படவேண்டும் உள்ளிட்ட வலியுறுத்தல்களை முன்வைத்தே கரிநாள் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. இவை அனைத்துடனும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுக்கு நேரடித் தொடர்புண்டு என்பதே இங்கு விடயம்.

ஆனால், இந்தப் போராட்டங்கள் ஏன் நடந்தன? எதற்காக முன்னெடுக்கப்பட்டன என்ற புரிதல் இந்திக்க அனுருத்தவுக்கு கொஞ்சம்கூட இல்லை. அல்லது அந்தப் புரிதல் இருந்தும் அதை ஏற்றுக் கொள்ளக்கூடிய மனோநிலையில் அவர் இல்லை. இந்திக்க அனுருத்த மட்டுமல்ல, சரத் வீரசேகர, விமல் வீரவன்ஸ உள்ளிட்ட இன்னும் சில இனவாதிகளும் கரிநாள் போராட்டங்களுக்கு எதிராகப் பொங்கி எழுந்திருக்கின்றனர். இவர்களில் எவரும் சாதாரண நபர்கள் அல்லர். முன்னாள் அமைச்சர்கள். குறிப்பாக சரத் வீரசேகர முன்னாள் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர். இத்தகைய நபர்கள் தமது ஆட்சிக்காலத்தில் தமிழர்களின் பிரச்சினைகளை எத்தகைய நிலைப்பாட்டில் அணுகியிருப்பார்கள் என்பதற்கு, அவர்களின் கருத்துகளே சாட்சியங்கள். இலங்கையைப் பொறுத்தவரையில், தோற்றுப் போன அரசியற்தலைவர்களின் பிரதான ஆயுதமாக 'இனவாதமும் மதவாதமுமே' காணப்படுகின்றன. மக்கள் நிராகரிப்பார்கள் என்ற அச்சத்தில், தேர்தலில் போட்டியிடாமல், தேசியப்பட்டியல் ஊடாக நாடாளுமன்றத்துக்குள் நுழைந்த நாமல் ராஜபக்ச அண்மைக்காலமாக தன்னைச் சிங்கள-பௌத்த தலைவராக நிலைநிறுத்துவதற்குப் படாதபாடு படுகின்றார். இனவாதம் இங்கே இலகுவான மொழி. ஆனால், காலம்காலமாக இனவாதிகள் தோற்கடிக்கப்பட்டே வந்திருக்கின்றனர் என்பதை அவர்கள் இன்னும் உணராதிருக்கிறார்களே.



### பொய்யாமொழி

**இல்வாழ்வான் என்பான் இயல்புடைய மூவர்க்கும்
நல்லாற்றின் நின்ற துணை**

**பொருள்:** இல்லறத்தில் வாழ்பவனாகச் சொல்லப் படுகின்றவன் அறத்தின் இயல்பை உடைய மூவர்க்கும் நல்வழியில் நிலை பெற்ற துணையாவான்.




## மேல்நீதிமன்றங்களில் குவிந்துள்ள சிறுவர் துஷ்பிரயோக வழக்குகள்!

**கொழும்பு, பெப்.10**

**நாடளாவிய ரீதியில் உள்ள மேல் நீதிமன்றங்களில் 4 ஆயிரத்து 289 சிறுவர் துஷ்பிரயோக வழக்குகள் பதிவுசெய்யப் பட்டுள்ளன என்று தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை தெரிவித்துள்ளது.**

1998ஆம் ஆண்டின் 28ஆம் இலக்கச் சட்டத்தின்கீழ் இந்த வழக்குகள் பதிவுசெய்யப்பட்டுள்ளன.

இந்த வழக்குகளில் ஆயிரத்து 683 வழக்குகள் ஜனவரியில் விசாரணைக்காக மீண்டும் அழைக்கப்பட்டுள்ளன.

அவற்றில், பாலியல் துஷ்பிரயோகங்கள், சிறுவர் மீதான வன்முறைகள் உள்ளிட்ட பல்வேறு குற்றச் செயல்கள் அடங்குகின்றன என்றும் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை மேலும் தெரிவித்துள்ளது. (க)



## 25 கிராம் ஹெரோய்னுடன் ஒருவர் கைது

கொழும்பு, பெப்.10

கொழும்பு, கிராண்ட்பாஸில் 25 கிராம் 150 மில்லிகிராம் ஹெரோய்னுடன் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். கொழும்பு மாவட்ட குற்றப்பிரிவு அதிகாரிகள் நடத்திய சோதனையின்போது சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இந்தச் சம்பவம் தொடர்பாக கொழும்பு மாவட்ட குற்றப்பிரிவு மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளது. (எ-இ)




## மூன்று மாதங்களுக்குள் மீண்டும் இலக்கத்தகடு

கொழும்பு, பெப்.10

வாகன இலக்கத் தகடுகளை அச்சிடும் பணிகள் எதிர்வரும் மூன்று மாதங்களுக்குள் மீண்டும் ஆரம்பிக்கப்படும் என மோட்டார் வாகன போக்குவரத்துத் திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் கமல் அமரசிங்க தெரிவித்துள்ளார்.

கடந்த ஆண்டு ஏப்ரல் மாதம் முன்னைய ஒப்பந்தம் இரத்துச் செய்யப்பட்டதை அடுத்து, இலக்கத் தகடுகளை அச்சிடும் பணிகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டன. அதையடுத்து தற்காலிக இலக்கத் தகடுகளைப் பயன்படுத்துவதற்கு திணைக்களம் அனுமதி வழங்கியிருந்தது. (எ-இ)

## சடலம் மீட்பு

களுத்துறை, பெப்.10

களுத்துறை, வஸ்கடுவ பகுதியில் சந்தேகத்துக்குகிடமான சடலம் ஒன்று மீட்கப்பட்டது.

சடலம் அடையாளம் காணப்படாத நிலையில், களுத்துறை வடக்குப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். சுமார் 60 வயது மதிக்கத்தக்க ஆண் ஒருவரின் சடலமே மீட்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர். (எ-இ)




## வெளிநாட்டு முதலீடு சடுதியாக அதிகரிப்பு

கடந்த 5ஆம் திகதியுடன் நிறைவடைந்த வாரத்தில், வெளிநாட்டு முதலீட்டாளர்கள் சுமார் 24.2 மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான பிணையங்களைக் கொள்வனவு செய்துள்ளனர். இது கடந்த 28 மாதங்களில் பதிவான மிக அதிகப்படியான வெளிநாட்டு முதலீடாகும்.

இந்த ஆண்டின் முதல் 5 வாரங்களில் மட்டும் இலங்கைக்குள் 12 ஆயிரத்து 654 மில்லியன் ரூபா (சுமார் 41.1 மில்லியன் டொலர்) நிகர வெளிநாட்டு முதலீடு கிடைத்துள்ளது. இலங்கை மத்திய வங்கி வெளியிட்டுள்ள அண்மைக்காலத் தரவுகளின்படி, நாட்டின் அரச பிணையங்கள் மீதான வெளிநாட்டு முதலீட்டாளர்களின் ஆர்வம் கணிசமாக அதிகரித்துள்ளது. கடந்த 5ஆம் திகதியுடன் நிறைவடைந்த வாரத்தில் மாத்திரம் 7 ஆயிரத்து 463 மில்லியன் ரூபா பெறுமதியான பிணையங்கள் வெளிநாட்டவர்களால் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன. (எ-இ)

நாளை

புதன்கிழமை - தை 28

11.02.2026

சுபநேரம் : 05.04 - 06.34

ராகுகாலம் : 12.34 - 02.04


செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அரச சேவையை வலுப்படுத்த அர்ப்பணிப்புடன் நடவடிக்கை



## அமைச்சர் நளிந்த தெரிவிப்பு

**கொழும்பு, பெப்.10**

**அரச ஊழியர்களின் சம்பளத்தை அதிகரிக்கவும், அவர்களுக்கான வசதிகளை மேம்படுத்தவும் அரசாங்கம் அர்ப்பணிப்புடன் செயற்படுகின்றது என்று அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவித்துள்ள தாவது-

அமைச்சர்கள் மற்றும் நாடாளு மன்ற உறுப்பினர்களுக்கு வழங் கப்பட்டுவந்த தேவையற்ற வரப் பிரதாங்களை இரத்துச் செய்ய அரசாங்கம் ஏற்கனவே தீர்மானித் துள்ளது.

சுகாதார மற்றும் ஊடகத்துறை அமைச்சு எதிர்வரும் பத்தாண்டு களுக்கான மூலோபாயத் திட்டத் தைத் தயாரித்து வருகின்றது. தேசி யக் கொள்கையின் அடிப்படையில் சுகாதாரத் துறையின் சவால் களைக் கண்டறிந்து, அதை மேலும் வலுப்படுத்துவதே எமது பிரதான நோக்கமாகும்.

சுகாதாரப் பிரிவின் கீழ் உள்ள அனைத்து நிறுவனங்களும் இந் தத் திட்டத்தின் கீழ் இயங்க வேண் டும்-என்றார். (எ-இ)

# நிலக்கரி இறக்குமதி அனைத்தும் மர்மம்!

## முன்னிலை சோசலிசக் கட்சி தெரிவிப்பு

கொழும்பு, பெப்.10

தரம் குறைந்த நிலக்கரியைக் கொண்டுவந்த நிறு வனத்தைப் பாதுகாப்பதற்காக அரசாங்கம் இரசாயன அறிக்கையை மறைத்துள்ளது என்று முன்னிலை சோசலிசக் கட்சியின் கல்விச் செயலாளர் புபுது ஜய கொட குற்றஞ்சாட்டியுள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

நிலக்கரி சம்பவம் தொடர்பில் மக்கள் விடுதலை முன் னிணியின் செயலாளர் மற்றும் வலுசக்தி அமைச்சர் ஆகியோரின் கருத்துகள் முரண்பட்டதாகும்.

இரண்டு கப்பல்களில் நிலக்கரி உரிய தரத்தில் இல்லா மல் ஆகும்போது, கேள்விக்கோரல் நிராகரிக்கப்படும் என்று கேள்விக்கோரலின் ஒப்பந்தத்தில் இருக்கும் போது, அந்தக் கட்டளைக் கோரலைத் தொடர்ந்து முன்னெடுத்துச்செல்கிறார்கள்.

நிறுவனத்துக்கு நன்மை பயக்கும் வகையில், அரசாங் கம் ஒப்பந்தத்தை மீறி அவசரக் கொள்வனவுகளுக்கு அனுமதி வழங்கியிருக்கிறது. அதனால் நிலக்கரி கேள்விக்கோரலின் முழு நடவடிக்கையும் சந்தேகத் திற்குரியதாகும்-என்றார். (எ-இ)




# சபாநாயகருக்கு எதிராக விரைவில் விசாரணை

கொழும்பு, பெப்.10

பணிநீக்கம் செய்யப்பட்ட நாடாளுமன்ற பிர திச் செயலாளர் நாயகம் சமிந்த குலரத்ன, சபாநாயகருக்கு எதிராக, தாக்கல் செய்த முறைப்பாட்டை விசாரிக்க இலஞ்சம் மற்றும் ஊழல் ஒழிப்பு ஆணைக்குழு தீர்மானித்துள் ளது.

அண்மையில் கூடிய இலஞ்சம் மற்றும் ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவிடம், இந்த முறைப்பாடு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அது தொடர்பில் கலந்துரையாடப்பட்டு முறைப் பாடு விசாரணைக்கு எடுக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, இடைநீக்கம் செய்யப்பட்ட சமிந்த குலரத்னவுக்கு எதிராக இலஞ்சம் மற் றும் ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவால் பெறப்பட்ட முறைப்பாட்டை ஆராயவும் தீர் மானிக்கப்பட்டுள்ளது. (எ-இ)

# ஜே.வி.பி.யிடம் சம்பளத்தை மீளக்கேட்கும் உறுப்பினர்கள்



கொழும்பு, பெப்.10

நாடாளுமன்ற உறுப் பினர்களாக இருந்த காலத்தில் கட்சியின் நிதிக்காகப் பெற்ற மில் லியன் கணக்கான ரூபா சம்பளத்தைக் கோரி, ஜே.வி.பி.யின் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர்கள் குழு, கட்சித் தலைவர்களுக்கு எதிராக வழக்குத் தொடர நடவடிக்கை எடுத்துவருகின்றது. ஜனாதிபதி சட்டத்தரணிகள் குழு ஒன்று அவர்களின் சட்ட முயற்சிகளுக்கு ஆதர வளித்து வருகின்றது என்று அறியமுடிகின்றது.

மாகாணசபை உறுப்பினர்களாகவும் நாடாளுமன்ற உறுப்பினர்களாகவும் இருந்த காலத்தில், உறுப்பினர் களின் அனைத்துச் சம்பளங்களும் ஜே.வி.பி.யின் கட்சி நிதிக்காகப் பெறப்பட்டன என்றும், அத்தகைய கொடுப்பனவுகளை எடுப்பது சட்டவிரோதமானது என் றும் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர்கள் சுட்டிக் காட்டுகின்றனர். இதுதொடர்பாகக் கருத்துத் தெரிவித்த ஓய்வுபெற்ற நாடாளுமன்ற உறுப்பினர்கள் மன்றத் தின் செயலாளரும் ஜே.வி.பி.யின் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினருமான பிரேமசிறி மானகே, கட்சி நிதிக்காக எடுக்கப்பட்ட பணத்தைத் திரும்பப் பெற தொடர்ந்து போராடுவோம்.

எனது சம்பளப் பணத்தைக் கட்சி நிதிக்காகப் பெற்று, தனது ஓய்வூதியத்தை இரத்துச் செய்வது மிகவும் நியா யமற்றது-என்றார். (எ-இ)



# போட்டிப்பரீட்சை வர்த்தமானி இளையோருக்கு பெரும் அநீதி

## எதிர்க்கட்சித் தலைவர் குற்றச்சாட்டு

கொழும்பு, பெப்.10

ஆசிரியர் சேவைக்கான போட்டிப் பரீட்சைக்காக வெளி யிடப்பட்டுள்ள வர்த்தமானி அறிவித்தலில் உள்ள நிபந் தனை காரணமாக பெருமளவான இளைஞர், யுவதிகளுக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளது என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

ஆசிரியர் சேவைக்கான போட்டிப் பரீட்சைக்காக வெளி யிடப்பட்டுள்ள வர்த்தமானி அறிவித்தலில், 2025 ஜூன் 30ஆம் திகதிக்கு முன்னர் பட்டப்படிப்பை நிறைவு செய்த வர்களே தகுதியுடையவர்களாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்தத் தீர்மானத்தால், அதற்குப் பின்னர் பட்டப்படிப்பை முடித்த பெருமளவான இளைஞர், யுவதிகளுக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளது.

இந்த வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள திகதியை நீடித்து, புதிய வர்த்தமானி அறிவித்தலை அரசாங்கம் வெளியிடவேண்டும். வர்த்தமானிகளை வெளியிடுவதற்கு முன்னர் அரச தொழில் கோரும் பட்டதாரிகள் சங்கத்தின் உறுப்பினர்களது கருத்துகளையும் அரசாங்கம் கேட்டறிய வேண்டும்-என்றார். (எ-இ)



# ஜனநாயகக் கோசத்தை விடுத்து மாகாணத் தேர்தலை நடத்துங்கள்

## அரசுக்கு நாமல் சவால்

கொழும்பு,பெப்.10

ஜனநாயகம் பற்றிக் கோசம் எழுப்பும் அரசாங்கம், மாகாண சபை விடயத்திலும் ஜனநாய கத்தை நிலைநாட்டவேண்டும். முடிந்தால் தேர்தலை விரைவாக நடத்தவேண்டும் என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெர முனக் கட்சியின் தேசிய அமைப் பாளர் நாமல் ராஜபக்ச வலி யுறுத்தியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ள தாவது-

வடக்கு, கிழக்கு மக்களைப் பற்றி அதிகம் கதைக்கும் இந்த அர சாங்கம் மாகாணசபைத் தேர் தலை நடத்துவதற்கு நட வடிக்கை எடுக்கவேண்டும். வடக்கு, கிழக்குப் போலவே தெற் கிலும் தற்போது ஆளுநர்கள் ஊடாகவே நிர்வாகம் இடம்பெறு கின்றது. ஆளுநர்களின் தேவைக்கேற்ப நடவடிக்கை முன்னெடுக்கப்படுகின்றது. ஜனநாயகம் பற்றிக் கோசம் எழுப்பும் இந்த அரசாங்கம் மாகாணசபை விடயத்திலும் ஜன நாயகத்தை நிலைநாட்ட வேண் டும்.

அதேவேளை, 2015 இல் ராஜ பக்சக்களைத் தோற்கடிப்பதற் காக ஜே.வி.பி. பொய்கூறும் அரசியல் பிரசாரத்தை முன்னெ டுத்தது. நாம் அவ்வாறான அர சியலில் ஈடுபடமாட்டோம்.

அத்துடன், ஐக்கிய தேசியக் கட்சி யும், ஐக்கிய மக்கள் சக்தியும் ஒன்றிணைய வேண்டும் என் றார். (எ-44)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறக்குமதியில் தங்கி வாழாது உற்பத்திகளை அதிகரிப்போம்



## விவசாயிகளுக்கு ஆலோசனை

**மன்னார், பெப்.10**

**எமது நாடு ஒரு விவசாய நாடு. எங்களால் உற்பத்தி செய்யக்கூடிய பொருள்களைக்கூட இறக்குமதி செய்யவேண்டிய கட்டாயத்துக்கு நாம் இன்று தள்ளப்பட்டுள்ளோம். எனவே நாம் இறக்குமதியை எதிர்பார்க்காமல், முடிந்தவரை விவசாயத்துறையை மேம்படுத்தவேண்டும்.**

இவ்வாறு மன்னார் மாவட்ட மேலதிகச் செயலர் எம்.பிரதீப் தெரிவித்தார்.

டித்வா புயலால் பாதிக்கப்பட்ட மேட்டுநிலப் பயிர்ச்செய்கையாளர்களுக்கு நீர் இறைக்கும் இயந்திரங்கள் வழங்கும் நிகழ்வு, மன்னார் மாவட்டச் செயலகத்தில் கடந்தவாரம் இடம்பெற்றது. அந்த நிகழ்வில் விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது-

நாட்டில் நிலவுகின்ற நெருக்கடிகளுக்குத் தீர்வு காண்பதற்கு, எமது பொருளாதாரம் மேம்படவேண்டும். தனியே அரச நிறுவனங்களை அல்லது சேவை வழங்கும் நிறுவனங்களை அபிவிருத்தி செய்வதல்லாமல், எங்களுடைய நாடு ஒரு விவசாய நாடு என்ற வகையில் விவசாயத்துறையை மேம்படுத்தவேண்டும்.

நாட்டில் அரிசி இறக்குமதி செய்யவேண்டிய நெருக்கடி எங்களுக்கு ஏற்பட்டுள்ளது. எங்களால் உற்பத்தி செய்யக்கூடிய பொருள்களைக்கூட இறக்குமதி செய்யவேண்டிய தேவை ஏற்படுகின்றது. அவ்வாறில்லாமல் உற்பத்தித் துறையை நாம் மேம்படுத்தவேண்டும் அதனூடாக நம்முடைய நாட்டின் பொருளாதாரத்தை எட்டமுடியும்-என்றார்.

நிகழ்வில் யு.என்.டி.பி. நிறுவனத்தின் நிதி உதவியுடன், விவசாயத் திணைக்களத்தால் தெரிவுசெய்யப்பட்ட 25 விவசாயிகளுக்கு நீர் இறைக்கும் இயந்திரங்கள் வழங்கப்பட்டன. (க-56)

# வடக்கு முன்பள்ளி ஆசிரியர்களை கல்வி அமைச்சுடன் இணைக்குக

## பிரதேசசபை உறுப்பினர் கோரிக்கை

யாழ்ப்பாணம், பெப்.10

நீண்ட காலமாக பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில் சேவையாற்றிவரும், வடமாகாண முன்பள்ளி ஆசிரியர்களை கல்வி அமைச்சுடன் இணைத்து, அரசாங்க சம்பளம் வழங்குவதற்கான விசேட நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும் என்று சாவகச்சேரிப் பிரதேசசபை உறுப்பினர் சிவபாதம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

வடக்கு மாகாணத்தில் குறிப்பாக யாழ்ப்பாணத்தில் முன்பள்ளி ஆசிரியர்களின் சம்பளம், வலயக்கல்வி அலுவலகம் மூலமாக வழங்கப்படும் உதவித்தொகையான 6 ஆயிரம் ரூபா மட்டுமே. பாதுகாப்பு அமைச்சின் கீழ் உள்ள சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தால் நடத்தப்படும் முன்பள்ளிகளின் ஆசிரியர் ஒருவருக்கு ஏறத்தாழ 40 ஆயிரம் ரூபாவுக்கும் மேற்பட்ட சம்பளம் வழங்கப்படுகின்றது.

வடக்கு மாகாண உள்ளூராட்சி மன்றங்கள் சிலவற்றால் நடத்தப்படும் முன்பள்ளிகளில் நிரந்தர நியமனமுள்ள போட்டிப்பரீட்சை மூலம், நியமனம் செய்யப்பட்ட இடமாற்ற விதிகளுக்கு உட்படக் கூடிய முன்பள்ளி ஆசிரியர்களும் 30 ஆயிரம் ரூபாவுக்கு உட்பட்ட சம்பளத்துடன் வடக்கு மாகாணசபையால் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். எனினும் பெரும்பாலான முன்பள்ளி ஆசிரியர்களுக்கு வெறும் 6 ஆயிரம் ரூபா உதவித்தொகை மட்டுமே வாழ்வாதாரமாகக் கிடைக்கின்றது.

வடக்கு மாகாண ஆளுநர், ஜனாதிபதி, பிரதமரின் கவனத்துக்கு இவ்விடயத்தைக் கொண்டுசெல்வதன் மூலம், அனைத்து முன்பள்ளிகளையும் வடக்கு மாகாணசபையின் கல்வி அமைச்சின் முன்பள்ளிகளாக உள்வாங்க நடவடிக்கை எடுக்கவேண்டும். அங்கு கற்பிக்கும் ஆசிரியர்கள் அனைவருக்கும் ஓய்வூதியத்துடன் கூடிய நிரந்தர ஆசிரியர் நியமனம் வழங்குவதற்கும், சம்பள அதிகரிப்பை வழங்குவதற்கும் நடவடிக்கை எடுக்கவேண்டும்-என்றார். (க-159)



# மந்திகை மருத்துவமனைக்கு தன்னியக்க நீர்த்தொகுதி

யாழ்ப்பாணம், பெப்.10

பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் தன்னியக்கக் கட்டுப்பாட்டு முறையிலான தடையற்ற நீர் விநியோகத்தை வழங்கும் தொகுதியின் ஆரம்ப நிகழ்வு நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது. வடமராட்சியைச் சேர்ந்த 1992ஆம் ஆண்டு கல்விப் பொதுத்தராதர உயர்தரத்தில் கல்விகற்ற அணியினரின் 2.5 மில்லியன் ரூபா நிதிப்பங்களிப்பில் இந்தத் தொகுதி அமைக்கப்பட்டுள்ளது.

பருத்தித்துறை ஆதார மருத்துவமனையின் மருத்துவ அத்தியட்சகர் யோ.திவாகர் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் மருத்துவ அதிகாரிகள், தாதியர், மருத்துவமனை உத்தியோகத்தர்கள், வடமராட்சியில் 1992ஆம் ஆண்டில் உயர்தரத்தில் கல்வி கற்ற அணியினர் எனப் பலர் கலந்துகொண்டனர். (ஏ-41-66)

# வாகன விபத்தில் இருவர் படுகாயம்

யாழ்ப்பாணம், பெப்.10

மோட்டார் சைக்கிளும், துவிச்சக்கரவண்டியும் நேருக்கு நேர் மோதி இடம்பெற்ற விபத்தில் இருவர் படுகாயமடைந்தனர்.

இந்த விபத்து கரவெட்டி சம்மந்தர் கடைப் பகுதியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. கரவெட்டி சம்பந்தர் கடை இலகடிப்பகுதியில் வீதியில் பயணித்த மோட்டார் சைக்கிளும், வீதியில் பிரவேசித்த துவிச்சக்கரவண்டியும் நேருக்கு நேராக மோதியதில் விபத்து ஏற்பட்டுள்ளது. விபத்தில் காயமடைந்த இருவரும் பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். (க-100)



வரலாற்றுச் சிறப்புமிக்க கீரிமலை நகுலாம்பிகாதேவி சமேத நகுலேஸ்வரர் ஆலய வருடாந்த மஹோற்சவப் பெருவிழாவின் ஏழாம் நாள் மாலை உற்சவமான சந்திரசேகரப் பட்டம் சூட்டுவிழா நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை பக்திபூர்வமாக இடம்பெற்றது. (ஏ-41-66)

# கடைக்குள் புகுந்த மோட்டார் சைக்கிள்

யாழ்ப்பாணம், பெப்.10

அதிவேகமாகப் பயணித்த மோட்டார் சைக்கிள், கட்டுப்பாட்டை இழந்து பிரதான வீதியோரமாக இருந்த கடைக்குள் புகுந்து விபத்துக்குள்ளானது.

இந்த விபத்து நெல்லியடி நகர்ப்பகுதியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. பருத்தித்துறையிலிருந்து பயணித்த மோட்டார் சைக்கிள் கட்டுப்பாட்டை இழந்து, எதிர்ப்பக்கம் பயணித்த மோட்டார் சைக்கிளுடன் மோதியதில் விபத்துக்குள்ளானது. விபத்தை ஏற்படுத்திய மோட்டார் சைக்கிளில் பயணித்தவர் கீழே விழுந்தநிலையில், மோட்டார் சைக்கிள் மட்டும் அதே வேகத்தில் சுமார் 50 மீற்றர் தூரம் வரை பயணித்து பிரதான வீதியோரமாக இருந்த தொலைபேசிக் கடை ஒன்றுக்குள் புகுந்துள்ளது. கடையில் இருந்த கதிரை, ஒலிபெருக்கிப்பெட்டி, கண்ணாடி என்பன உடைந்து சேதமடைந்தன. மோட்டார் சைக்கிளில் பயணித்த நபர் காயமடைந்த நிலையில் பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். (க-100)



# கண்ணகிஅம்மனுக்கு புதிய இராஜகோபுரம்

யாழ்ப்பாணம், பெப்.10

மயிலிட்டி வீரமாணிக்க தேவன்துறை அருள்மிகு கண்ணகி அம்மன் ஆலய புதிய இராஜகோபுரக் கட்டுமானத்துக்கான நாள் வேலை நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமானது.

புதிய இராஜகோபுரமானது பஞ்ச தளங்களைக் கொண்டதாக அமைக்கப்படவுள்ளது. மயிலிட்டி வீரமாணிக்க தேவன்துறை அருள்மிகு தோப்புப் பிள்ளையார் ஆலயத்திலும் தொடர்ந்து கண்ணகி அம்மன் ஆலயத்திலும் சிறப்புப்பூசை வழிபாடுகள் இடம்பெற்று சுப வேளையில் நாள் வேலை ஆரம்பிக்கப்பட்டது. மயிலிட்டியைச் சேர்ந்த பிரபல வர்த்தகர் அமரர் கே.வி.துரைச்சாமி யோகலட்சு தம்பதியால் 1970ஆம் ஆண்டு அமைத்துக்கொடுக்கப்பட்ட இந்த ஆலயத்தின் இராஜகோபுரம் அவர்களது குடும்பத்தினரது நிதிப்பங்களிப்பில் அமைக்கப்படவுள்ளது. (41-100)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இஸ்லாமாபாத்தில் குண்டுவெடிப்பு

இஸ்லாமாபாத்,பெப்.10

பாகிஸ்தான் தலைநகர் இஸ்லாமாபாத்தில் உள்ள ஷியா பிரிவு மசூதி ஒன்றில் கடந்த வெள்ளிக்கிழமை தற்கொலைப் படைத் தாக்குதலில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 36 ஆக உயர்ந்துள்ளது. 169க்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்து மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர். இந்தத் தாக்குதலுக்கு ஐ.எஸ். பயங்கரவாத அமைப்பு உத்தியோகபூர்வமாகப் பொறுப்பேற்றுள்ளது.

(ச-இ)


## காணி விற்பனைக்கு

கோண்டாவில் கிழக்கு நாகபூசணி அம்மன் கோயில் வீதியில் வீட்டுடன் 6 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு:-
077 634 1242

(CR/47042) J-1

## வாடகைக்கு/ கொள்வனவுக்கு

பிரசித்தி பெற்ற வியாபார நிறுவனத்தின் யாழ்ப்பாணக்கிளைக்கு நிரந்தர வாடகைக்கு அல்லது கொள்வனவுக்கு பிரதான வீதியில் அமைந்துள்ள வியாபாரக்கூட்டம் வாகனத்தரிப்பிடத்துடன் தேவை. அல்லது உகந்த நிலம் கொள்வனவுக்கு தேவை. யாழ்ப்பாண பிரதான நகரத்தில் அல்லது அண்டிய பகுதியில் விரும்பத்தக்கது.

தொடர்புகளுக்கு:- 077 374 6448

(CS/60691) J-1

## தவறவிடப்பட்டுள்ளது

09.02.2026 திங்கட்கிழமை நல்லூர்ப் பகுதியில் துரைசிங்கம் செல்வராஜா என்பவரது சாரதி அனுமதிப்பத்திரம் (83193797), தேசிய அடையாள அட்டை (460910080v), வாகன காப்புறுதி அட்டை (Driving Licence, IC, Insurance) அடங்கிய பை தவறவிடப்பட்டுள்ளது. கண்டெடுத்தவர்கள் தொடர்பு கொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு:- 076 306 2414

(CS/60698) J-1

## காணி உடனடி விற்பனைக்கு

யாழ். அரியாலையில் 24 பரப்பு குடியிருப்புக் காணி உடனடி விற்பனைக்கு. 3 அறை வீடு, 2 கிணறுகள், 40 தென்னை மரங்கள் கொண்டது. A-9 கண்டி வீதி 200 மீ தூரத்தில். யாழ். நகர் 15 நிமிடம்.

விபரங்களுக்கு:
074 300 7992
WhatsApp +44 7414 942508

## பெயர் மாற்றம்

புத்தூர் மேற்கு கலைமதி வீதியில் வசிக்கும் சுந்தரம் சுவேந்திரா ஆகிய நான் எனது பெயரை சுந்தரம் சுவேந்திரன் என மாற்றம் செய்கிறேன்.

சுந்தரம் சுவேந்திரன்

(CS/60693) J-1


## அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்



மண்ணில்
18 • 01 • 1940

விண்ணில்
11 • 01 • 2026

கடந்த 11.01.2026 ஞாயிற்றுக்கிழமை அன்று
இறைபதமடைந்த எமது குடும்பத் தலைவர்

### அமரர் கந்தையா இராசரத்தினம் (குரு)

(சமாதான நீதவான், ஓய்வுபெற்ற நீதிமன்ற பதிவாளர்)

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (10.02.2026) செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத்தொடர்ந்து இடம்பெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மேலும் அன்னாரின் மறைவுச் செய்தியறிந்து நேரில் வருகை தந்தும், தொலைபேசி வாயிலாகவும் ஆறுதல் தெரிவித்தோர்க்கும், மற்றும் பலவழிகளிலும் உதவிகள், ஒத்தாசைகள் புரிந்த அனைத்து உள்ளங்களுக்கும் எம் குடும்பம் சார்பாக நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றோம்.

958/39, றாணி இல்லம்,
கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.
(காமாட்சி முன்பள்ளிக்கு அருகாமையில்.) (CS/60699) J-1

குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்



தோற்றம்
03 • 11 • 1927

மறைவு
08 • 02 • 2026

### இரத்தினம் அன்னபூபதி

கலைமகள் வீதி, கல்வியங்காட்டைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட இரத்தினம் அன்னபூபதி அவர்கள் கடந்த (08.02.2026) ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லையா இரத்தினம் அவர்களின் அன்பு மனைவியும், மகேந்திரநாதன், இராஜேஸ்வரி (ஓய்வுநிலை ஆசிரியை), காலஞ்சென்ற குணேந்திரன், சற்குணநாதன் (ஓய்வுநிலை ஆசிரியர்), ஜெகதீஸ்வரி (ராணி - பிரான்ஸ்), காந்திமதி (ரதி - கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும், சற்குணராணி, சபாபதி, சூரியகுமாரி, கலைவாணி (ஓய்வுநிலை ஆசிரியை), வரதன் (பிரான்ஸ்), ஸ்ரீரெட்ணகுமார் (கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும், Dr.தக்ஷாயினி, அருள்பிரசாத், லதன் (வேலணை பிரதேசசபை), காலஞ்சென்ற சுலக்ஷனா, சுஜீவ்காந் (நியூசிலாந்து), அனோஜா, மயூரி, அரவிந், சுகிர்தன், பர்சிதன், அசன் (பிரான்ஸ்), வேணுஜா (நியூசிலாந்து), துஸ்யந்தன், அரவிந் (கனடா) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், இலக்கியா, எழிலன், மகிழன், தீபக்சரண், அபிரா, லத்விகா ஆகியோரின் பாசமிகு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரிகைகள் நாளை (11.02.2026) புதன்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைப்பெற்று பூதவுடல், தகனக்கிரிகைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.


இவ்வறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும்
ஏற்றுக்கொள்ளுமாறுக் கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்: குடும்பத்தினர்

223, கலைமகள் வீதி, நல்லூர் வடக்கு, யாழ்ப்பாணம்.

(CR/47040) J-1

## மரண அறிவித்தல்



தோற்றம்
19 • 04 • 1946

மறைவு
08 • 02 • 2026

### தம்பிராஜா முத்துலிங்கம் (முத்து)

யாழ். குப்பிளானை பிறப்பிடமாகவும், கனடாவை வசிப்பிடமாகவும், கொண்ட தம்பிராஜா முத்துலிங்கம் (முத்து) அவர்கள் கடந்த (08.02.2026) ஞாயிற்றுக்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆயுர்வேத வைத்தியர் தம்பிராஜா - நாகம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான இளையப்பு - நாகம்மா (பரிமளம்) தம்பதியரின் அன்பு மருமகனும், விக்னேஸ்வரிஅம்மா அவர்களின் அன்புக் கணவரும், பிரதீபன் (தீபன்), பிரியதர்ஷினி, பார்த்திபன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்றவர்களான Dr.குணசுந்தரம் சிவலிங்கம் (சிவம்), தவமலர், மற்றும் மாகலிங்கம், இரத்தினசிங்கம், செல்வமலர் ஆகியோரின் அன்புச் சகோதரரும், இந்துஜா, நந்தகுமார் (நந்தன்), டிலுஷா ஆகியோரின் அன்பு மாமானாரும், ஹரிணி, லக்ஷ்மன் சாரல், கோகுலன், மிதுலன், திவ்யா, மிரைஜா, நேத்திரா ஆகியோரின் பாசமிகு பேரனும், ரஜனி, சரோஜினிதேவி, வசந்தி, கலா, கனேசதாசன், காலஞ்சென்ற விக்கினேஸ்வரன் (அப்பன்), சிவநேசன், கனேசதாசன், ஸ்ரீஸ்கந்தராஜா (மணி) ஆகியோரின் மைத்துனரும், Dr. ரோஹன், Dr. ராகவன், ரிஷான் ஆகியோரின் தாய் மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (11.02.2026) புதன்கிழமை 05.00 மணியிலிருந்து 09.00 மணிவரை அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, பின் நாளைமறுதினம் (12.02.2026) வியாழக்கிழமை மு.ப 11:30 மணியிலிருந்து பி.ப 1:30 மணிக்குள் Chapel Ridge Funeral Home & Cremation Centre 8911 Woodbine Ave, Markham, ON L3R 5G1 என்னும் இடத்தில் தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவரும்.
ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்:
தீபன் (மகன்) - +1(416) 556 1925,
பார்த்தி (மகன்) - +1(647) 830 9969
நந்தன் (மருமகன்) - +1(647) 708 2123

(CS/30920) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கோப்பாய் கலாசாலையின் முன்னாள் அதிபர் மறைவு



கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் முன்னாள் அதிபர் மு.பரஞ்சோதி (வயது -79) காரை நகரில் நேற்றுக் காலமானார்.

கணிதத்துறை பட்டதாரியாகவும், இலங்கை கல்வி நிர்வாக சேவை உத்தியோகத்தராகவும் பணியாற்றிய இவர், 1998 தொடக்கம் 2002 வரை கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் அதிபராகக் கடமையாற்றினார் என்பது குறிப்பிடத்தக் கது. இவரது மறைவுக்கு கலாசாலைச் சமூகத்தினர் இரங்கல் வெளியிட்டுள்ளனர். (அ)

## வல்லப்பட்டை கடத்திய ஆறு பேர் கைது

கொழும்பு, பெப்.10

கேகாலை பகுதியில் 15 இலட்சம் ரூபாவுக்கும் அதிக பெறுமதியுடைய வல்லப்பட்டை மரப் பலகைகள் மற்றும் மான் கொம்புகளுடன் ஆறு சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர்கள் கேகாலை, அலபலாவலவத்துர மற்றும் பிற பகுதிகளைச் சேர்ந்தவர்கள் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

விமானப்படையின் புலனாய்வுப் பிரிவுக்குக் கிடைத்த தகவலுக்கமைய, ரிட்டிகலவனஉயிரிகள்திணைக்களம், குருநாகல் வன உயிரிகள் திணைக்களம் மற்றும் குருநாகல் நாரம்பெத்த விசேட பொலிஸ் அதிரடிப்படையினர் இணைந்து இந்தக் கைது நடவடிக்கையை முன்னெடுத்துள்ளனர்.

சந்தேக நபர்களிடமிருந்து ஆயிரத்து 50 கிலோகிராம் வல்லப்பட்டை, மான் கொம்புகள் உள்ளிட்ட பொருள்களுடன் லொறி ஒன்றும் கைப்பற்றப்பட்டுள்ளது. (எ-இ)

## ரம்புக்வெலவுக்கு எதிரான வழக்கு மார்ச் மாதத்துக்கு

கொழும்பு, பெப்.10

ஊழல் குற்றச்சாட்டின் பேரில் முன்னாள் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல உள்ளிட்ட மூன்று பிரதிவாதிகளுக்கு எதிராக இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவினால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கின் மேலதிக விசாரணையை எதிர்வரும் மாதம் 14 ஆம் திகதி அழைக்குமாறு கொழும்பு மேல் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இந்த வழக்கு நேற்று கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி மொஹமட் மிஹால் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

மன்றில் முன்வைக்கப்பட்ட விடயங்களை ஆராய்ந்த நீதிபதி, வழக்கின் மேலதிக விசாரணையை எதிர்வரும் மார்ச் மாதம் 14 ஆம் திகதி அழைக்குமாறு உத்தரவிட்டார்.

முன்னாள் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல, ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தின் முன்னாள் தலைவர் விமல் ரூபசிங்க மற்றும் முன்னாள் பணிப்பாளர் நாயகம் சந்திரபால லியனகே ஆகியோர் இந்த வழக்கில் பிரதிவாதிகளாகப் பெயரிடப்பட்டுள்ளனர். (எ-இ)

## குருதிக்கொடை

யாழ்ப்பாணம், பெப். 10

பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் ஏற்பட்டுள்ள குருதி தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்யும் வகையில், கரவெட்டி செஞ்சுடர் விளையாட்டுக்கழக மண்டபத்தில் நாளைமறுதினம் குருதிக்கொடை முகாம் இடம்பெற உள்ளது.

பருத்தித்துறை குருதி வங்கியினரின் பங்கேற்பில் செஞ்சுடர் விளையாட்டுக் கழகத்தால் முன்னெடுக்கப்படும் இந்த குருதிக்கொடை முகாமில் பங்கேற்றுமாறு ஆர்வலர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (ம-100)

## லைசென்ஸ் விண்ணப்பதாரிகளில் 8 வீதத்தினருக்கு உடல்நல குறைவு

கொழும்பு, பெப்.10

சாரதி அனுமதிப் பத்திரத்தைப் பெறுவதற்காக விண்ணப்பித்தவர்களில் சுமார் 8 சதவீதமானவர்கள் உடல்நலக் குறைவு காரணமாக வாகனம் செலுத்துவதற்குத் தகுதியற்றவர்கள் என கண்டறியப்பட்டுள்ளது.

தேசிய போக்குவரத்து மருத்துவ நிறுவகம் வெளியிட்ட அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2024 ஆம் ஆண்டில் 9 இலட்சத்து 54 ஆயிரத்து 536 மருத்துவ பரிசோதனைகள் நடத்தப்பட்டுள்ள நிலையில், அவற்றில் 69 ஆயிரத்து 728 பேர் உடல்நலக் குறைபாடு காரணமாக, சாரதி அனுமதிப் பத்திரத்தைப் பெறுவதிலிருந்து தற்காலிகமாக நிராகரிக்கப்பட்டுள்ளனர்.

அதிக எண்ணிக்கையானவர்கள் பார்வைக் குறைபாட்டால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று தேசிய போக்குவரத்து மருத்துவ நிறுவகம் சுட்டிக்காட்டியுள்ளது. மருத்துவ பரிசோதனைகளில் 77 சதவீதமானோருக்குக் கண் பிரச்சினைகள் இருப்பது கண்டறியப்பட்டுள்ளது.

8 சதவீதமானோருக்குப் போதைப்பொருள் பழக்கம், 4.48 சதவீதமானோருக்கு நீரிழிவு நோய், 3 சதவீதமானோருக்கு உயர் இரத்த அழுத்தம் மற்றும் 2.33 சதவீதமானோருக்கு இதய நோய் இருப்பது கண்டறியப்பட்டுள்ளது என்றும் தேசிய போக்குவரத்து மருத்துவ நிறுவகம் தெரிவித்துள்ளது. (எ-இ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராணுவத்தினரை இழிவுபடுத்தும் அரசுக்கு விரைவில் மக்கள் பதிலடி

## முன்னாள் இராஜாங்க அமைச்சர் கூறுகிறார்

**கொழும்பு, பெப்.10**

**நாட்டைப் பாதுகாத்த இராணுவத்தின் கௌரவத்துக்கு பங்கம் விளைவிக்கும் அரசாங்கத்தை, மக்கள் மிக விரைவில் வெறுத்து ஒதுக்குவர் என்று முன்னாள் இராஜாங்க அமைச்சர் பிரியால் நிஷாந்த தெரிவித்துள்ளார்.**

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது- தற்போதைய அரசாங்கம் இராணுவத்தினரை கௌரவமான முறையில் அழைக்கக்கூடத் தயங்கி, அவர்களை வெறும் 'சிப்பாய்கள்' என விளிப்பது மிகுந்த கவலைக்குரியது. இராணுவப் புலனாய்வுப் பிரிவினரையோ அல்லது இராணுவத்தினரின் கௌரவத்தையோ உலகுக்குப் பறைசாற்ற இந்த அரசாங்கம் முன்வர வில்லை. அநாவசியமான கருத்துகளைக் கூறி மக்களின் அதிருப்திக்கு உள்ளாவதை விடுத்து, இராணுவத்தினருக்கும் மதத்தலைவர்களுக்கும் உரிய கௌரவத்தை வழங்க அரசாங்கம் முன்வர வேண்டும். அப்பாவி மக்களின் தோள் களில் ஏறி ஆட்சிக்கு வந்தவர்கள் மக்களின் நம்பிக்கையைத் தக்கவைக்கத் தவறினால், மிகவிரைவில் மக்களால்நிராகரிக்கப்படுவர். இந்த நிலைமையைத் தவிர்க்கத் தேவையான நடவடிக்கைகளை ஆட்சியாளர்கள் எடுக்காவிட்டால், நாடு முன் எப் போதும் இல்லாத ஒரு அபாய கரமான நிலைமையை அடையும்-என்றார். (சு)

# ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைந்தே அடுத்த தேர்தல்

## ஐ.தே.க. நம்பிக்கை

ஐக்கிய தேசியக் கட்சியுடன் ஒன்றிணைவதற்கான சாத்தியக் கூறுகள் நெருங்கியுள்ளன. அதற்கமைவாக அடுத்துவரும் தேர்தல்களைக் கூட்டு எதிரணியாக எதிர்கொள்வோம் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் ருவான் விஜேவர்தன தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது- ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் ஐக்கிய மக்கள் சக்தி என்பன ஒன்றிணைந்த பின்னர் வலுவானதொரு கூட்டு எதிரணியைக் கட்டியெழுப்ப முடியும். எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவுடன் பேச்சு நடத்தப்பட்டு வருகின்றது. அது சாதகமான திசையை நோக்கிப் பயணிக்கின்றது.

சிறந்த பிரதிபலன் கிடைக்கும் என நம்புகின்றோம். கிராம மட்டங்களில் பிளவுபட்டிருக்கும் கட்சி ஆதரவாளர்கள் ஒன்றிணைந்துள்ளனர். தலைவர்களும் ஒன்றிணையவேண்டும் என்று கோரிவருகின்றனர்.

எனவே, ஐக்கிய மக்கள் சக்தியும், ஐக்கிய தேசியக் கட்சியும் ஒன்றிணைந்து அடுத்துவரும் தேர்தல்களை எதிர்கொள்வதற்குரிய சூழ்நிலை உள்ளது. நாம் இருதரப்பும் இணைந்த பின்னர் வலுவானதொரு பொது எதிரணியைக் கட்டியெழுப்பமுடியும் - என்றார். (சு-44)

## மணப்பெண் தேவை

www.thaalee.com என்கிற website இல் நீங்கலாகவே. உங்களுக்குப் பொருத்தமானவர்களைத் தெரிவு செய்து கொள்ளலாம். வெளிநாடு, உள்நாடு, என்பன உண்டு.

1. சுன்னாகம், இந்து கௌரவ குலம் (K) 1993, அனுசம், MBA, UK Electronic Engineering - Moratuva University மாப்பிள்ளைக்கு பெண் தேவை (57017).
2. மாதகல், இந்து கௌரவகுலம் (K), 1991, பரணி, Engineering (UK), Managment officer, UK Citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை.(53670)
3. அச்சுவேலி - புத்தூர், இந்து கௌரவகுலம் (K), 1986, பூரட்டாதி, B.Eng electrical and Electonic (ICBT), Electrical Engineer மாப்பிள்ளைக்கு பெண் தேவை. (51945)
4. உடுவில், இந்து கௌரவகுலம் (K), 1993 பூரம், B.Eng(Hons) in Civil and Structural, Project Engineer, Singapore பிள்ளைக்கு பெண் தேவை. (52945)
5. யாழ். Roman Catholic, 1980, குருகுலம் BBM, Manager, Divorce மாப்பிள்ளைக்கு பெண் தேவை (57444)
6. யாழ். Town, இந்து 1994, குருகுலம், திருவோணம், BSc in Mechanical Engineering, MSc (Canda), Mechanical Engineer, Canada Citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை (54640).
7. பருத்தித்துறை, இந்து, 1981, குருகுலம், கேட்டை, BSc in Network Engineering, UK Citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை (53849).
8. தெல்லிப்பழை, இந்து, குருகுலம், 1996, சித்திரை, Master of Business Management, Government Job, Newzealand citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை. (36133).
9. யாழ். Town, இந்து விஸ்வகுலம், 1991, உத்தரம், CIMA fully qualified, Canada citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை.(29780)
10. உடுப்பிட்டி, இந்து, விஸ்வகுலம், 1995, மகம், Bechelor of Business Management, Banker மாப்பிள்ளைக்கு பெண் தேவை. (56018)

S.Sharma J.P
திருமண சேவை
077 189 0367
077 5393 728

தேசியமட்ட காற்பந்தாட்ட

# இறுதியாட்டத்தில் சென். பற்றிக்ஸ்!




யாழ்ப்பாணம், பெப்.10

இலங்கை பாடசாலைகள் காற்பந்தாட்டச் சம்மேளனம் அகில இலங்கை ரீதியில் நடத்திய 14 வயதுக் குட்பட்ட பாடசாலை மாணவர்களுக்கான (சமபோஷா) கிண்ணத்துக்கான போட்டியில் யாழ். சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணி இறுதிப்போட்டிக்குத் தகுதி பெற்றுள்ளது. காலி மாவட்டத்தின் பத்தேகம பிரதேசசபை மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சின் கும்ம விளையாட்டு மைதானங்களில் கடந்த 6,7 மற்றும் 8ஆம் திகதிகளில் நடைபெற்ற குழுப் போட்டிகளில் (League) இந்த அணி சம்பியனானது. காலிறுதிக்கு முந்திய ஆட்டத்தில் பதுளை அல் அதான் கல்லூரியை 3:2 என்ற கோல் கணக்கிலும், காலிறுதியாட்டத்தில் நீர்கொழும்பு அல் ஹிலால் சர்வதேச பாடசாலையை 4:2 என்ற கோல் கணக்கிலும், அரையிறுதியாட்டத்தில் கொழும்பு Gateway சர்வதேசபாடசாலையை 2:1 என்ற கோல்கணக்கிலும் வெற்றி பெற்றது. நாளை புதன்கிழமை கொழும்பில் நடைபெறவுள்ள இறுதிப்போட்டியில் கொழும்பு ஷாகிராக் கல்லூரியுடன் இந்த அணி மோதவுள்ளது. (சு)

## மரண அறிவித்தல்

தோற்றம்
05
10
1961



மறைவு
09
02
2026

### சிவப்பிரகாசம் மகேந்திரராஜ்

சுண்டிக்குளி, யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், ஓமந்தை, வவுனியாவை வசிப்பிடமாகவும் கொண்ட சிவப்பிரகாசம் மகேந்திரராஜ் அவர்கள் நேற்று (09.02.2026) திங்கட்கிழமை அதிகாலை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிவப்பிரகாசம் - அம்பிகாவதி தம்பதியரின் மூத்தமகனும், சுப்பிரமணியம் - இரஞ்சிதமலர் தம்பதியரின் மருமகனும், சரஸ்வதி -ஓய்வுபெற்ற ஆசிரியை (யா/திருக்குடும்ப கன்னியர்மடம், வ/இறம்பைக்குளம் மகளிர் மகா வித்தியாலயம்) அவர்களின் பாசமிகு கணவரும், சுரேந்திரராஜ், சுலோஜினி ஆகியோரின் பாசமிகு சகோதரரும், லக்ஸ்மன்ராஜ், கிருசிகா, டிலக்ஸ்சன்ராஜ் ஆகியோரின் பாசமிகு தகப்பனும், குபேந்தினியின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (11.02.2026) புதன் கிழமை முற்பகல் 9.00 மணியளவில் HN, 4th ஒழுங்கை, அரசவீட்டுத்திட்டம், ஓமந்தை, வவுனியாவில் நடை பெற்று, 11.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக ஓமந்தை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
[illegible]
024 222 0421

(CR/47043) GD

## 20ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில்
12
04
1953



ஆண்டவன் அடியில்
10
02
2006

### அமரர் லோறன்ஸ் அலெக்ஸாண்டர்

காலம் சென்றாலும் குறையாத நேசம்,
கண்ணீர் துடைத்தது தந்தையின் பாசம்.
சொல்லாத பாடங்கள் சொல்லியே தந்தீர்.
வாழ்வில் ஒளியாக நீங்களே என்றும்.
இருபது ஆண்டுகள் கடந்தாலும் அப்பா,
இதயத்தில் நீங்கள் என்றும் உயிராய் - வாழ்கிறீர்

உம் நினைவுகளுடன் என்றும் வாழும்..
மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
சகோதரர்கள், சகோதரிகள், பேரப்பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போதைச் சாரதிகளை பணியமர்த்தின் நடவடிக்கை

கொழும்பு, பெப்.10
போதைப்பொருள்களுக்கு அடிமை யான சாரதிகளைச் சேவையில் இணைத்துக்கொள்ளும் பஸ் உரிமை யாளர்களுக்கு போக்குவரத்து அமைச் சர் எச்சரிக்கை விடுத்துள்ளார். போதைப் பொருள்களுக்கு அடிமையானவர்கள் சேவையில் இணைத்துக் கொள்ளப்பட்டு வார்களாயின், பஸ் உரிமையாளர்களின் வாகன அனுமதிப் பத்திரம் இரத்து செய் யப்படும் என அமைச்சர் தெரிவித் துள்ளார்.

அண்மைக்காலமாக மேற்கொள்ளப்பட்ட திடீர் சோதனைகளின் போது, அதிகள வான பஸ் சாரதிகள் போதைப் பொருள்க ளைப் பயன்படுத்துவது கண்டறியப்பட் டதை அடுத்தே, இந்த எச்சரிக்கை விடுக்கப் பட்டுள்ளது. (எ-இ)










## மகாஜனா...

கல்லூரியும் இறுதியாட்டத்தில் நாளை மோதவுள்ளன. இலங்கை கால்பந் தாட்ட சம்மேளனத்தால் சமபோச கிண் ணத்துக்காக இந்தத் தொடர் நடத்தப் பட்டு வருகின்றது. நேற்றுமுன்தினம் இடம்பெற்ற அரையிறுதி ஆட்டமொன் றில் யூனியன் கல்லூரி அணி பொலன றுவை றோயல் கல்லூரி அணியை எதிர்த்து மோதியது.

இதில் 06:03 என்ற கோல் கணக்கில் யூனியன் கல்லூரி அணி வெற்றிபெற் றது.

மகாஜனக் கல்லூரி அணி தனது அரை யிறுதி ஆட்டத்தில் களுத்துறை ஸ்ரீ சிவாலி மகா வித்தியாலயத்தை எதிர்த்து மோதியது. இந்த ஆட்டத்தில் 11:00 என்ற கோல் கணக்கில் மகாஜனக் கல் லூரி அணி வெற்றிபெற்றது.

இதையடுத்து, தெல்லிப்பழை மகாஜ னக் கல்லூரியும், தெல்லிப்பழை யூனி யன் கல்லூரியும் இறுதியாட்டத்தில் நாளை மோதவுள்ளன. இந்த ஆட்டம் கொழும்பு குதிரைப் பந்தய மைதானத் தில் நடைபெறவுள்ளது. (அ-ம)

## லிட்ரோ...

தப்பட்டது. இதற்கு உணவகங்களின் உரிமையாளர்கள் கடும் எதிர்ப்பைப் பதிவு செய்தனர். இவ்வாறான நிலையிலேயே, லிட்ரோ எரிவாயுவின் விலையில் மாற் றம் இல்லை என்று லிட்ரோ நிறுவனம் அறிவித்துள்ளது. (அ-ம)

## ஊழியர்...

எது. ஊதிய உயர்வு, மேலதிக நேரக் கொடுப்பனவு, நிரந்தர மற்றும் உள்ளக பணியிட வெற்றிடங்கள் நிரப்புதல், கட மையின்போது உயிரிழந்த பணியாள ருக்கான இழப்பீடு உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து யாழ்ப்பா ணப் பல்கலைக் கழக ஊழியர் சங்கத்தி னர் அண்மையில் போராட்டத்தை முன் னெடுத்தனர். அத்துடன், நேற்று மாலைக்குள் தீர்வு கிடைக்காவிட்டால் இன்றுமுதல் தொழிற்சங்கப் போராட்டத் தில் ஈடுபடவும் தீர்மானித்திருந்தனர்.

இவ்வாறான நிலையில், துணைவேந்தர் தலைமையில் நேற்று நடைபெற்ற விசேட கலந்துரையாடலின்போது பல்க லைக்கழக ஊழியர் சங்கத்தினரின் கோரிக்கை தொடர்பில் விரிவாக ஆரா யப்பட்டது. இதன்போது சில பிரச்சினை களுக்கு தீர்வுகளும், இன்னும் சில பிரச் சினைகளுக்கு சாதகமான முறையில் வாக்குறுதியும் வழங்கப்பட்டுள்ளது.

இதையடுத்து, பல்கலைக்கழக ஊழியர் சங்கத்தால் முன்னெடுக்கப்படவிருந்த தொழிற்சங்க நடவடிக்கை தற்காலிகமா கக் கைவிடப்பட்டுள்ளது. (அ-ம)

## அடுத்தகட்ட...

செம்மணி மனிதப் புதைகுழி தொடர் பான வழக்கு நேற்று விசாரணைக்காக எடுத்துக் கொள்ளப்பட்டது. கடந்த வழக் குத்தவணையில் தீர்மானிக்கப்பட்டதற்கு அமைய, புதைகுழிக்குள் தேங்கிநின்ற நீர் நேற்று அகற்றப்பட்டது.

யாழ்ப்பாணம் நீதவான் எஸ்.லெனின் குமார், சட்ட மருத்துவ அதிகாரி செல் லையா பிரணவன் உள்ளிட்ட அதிகாரி கள் சட்டத்தரணிகள் முன்னிலையில் நீரை அகற்றும் பணி நடைபெற்றது. சட்டத்தரணிகளான வி.எஸ்.நிரஞ்சன், ரனித்தா ஞானராஜா, குற்றப் புலனாய்வு திணைக்களத்தினர், பொலிஸார் உள் ளிட்ட பலரும் இதன்போது பிரசன்னமாகி இருந்தனர்.

யாழ்ப்பாணம் மாநகரசபையின் 5 ஆயி ரம் லீற்றர் கொள்ளளவு உடைய பவுசர் மூலமும், நல்லூர் பிரதேச சபையின் 3 ஆயிரம் லீற்றர் கொள்ளளவு உடைய பவுசர் மூலமும் புதைகுழியில் இருந்து அண்ணளவாக 91 ஆயிரம் லீற்றர் தண் ணீர் வெளியேற்றப்பட்டது. இதைய டுத்து, வழக்கு மார்ச் மாதம் 16ஆம் திக திக்கு தவணையிடப்பட்டது. அன்றைய தினமே அடுத்தகட்ட அகழ்வுப் பணி களை எப்போது ஆரம்பிப்பது என்ற தீர் மானம் எடுக்கப்படும். (அ-ம-26)

## மூன்றாம்...

எட்டு வாரங்களுக்கு இந்த அகழ்வுப் பணிகளைக் கொண்டுநடத்தும் வகையி லேயே பட்ஜெட் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. (அ-ம-26)

## மாகாணத்...

அடுத்த வருடத்துக்குப் பிற்போடும் நிலை யிலேயே தேசிய மக்கள் சக்தி அரசாங் கம் உள்ளது என்று அண்மையில் தக வல்கள் வெளிவந்திருந்தன. இவ்வா றான நிலையிலேயே, 'மாகாணத் தேர் தலை நடத்துமாறு இந்தியா விரைவில் தலையிடும். ஆதலால், தேர்தலை நடத்த வேண்டிய நிலைக்கு ஸ்ரீலங்கா அரசாங்கம் தள்ளப்படும்' என்று ஹரின் பெர்னாண்டோ கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-
அரசாங்கத்தின் கொள்கை வகுப்பாள ரான ரில்வின் சில்வா தற்போது இந்தியா வுக்குச் சென்றுள்ளார். அத்துடன், ஜனா திபதி அநுரகுமார திஸாநாயக்கவும் விரைவில் இந்தியாவுக்குச் செல்லவுள் ளார். இதன்போது மாகாணத் தேர்தலை நடத்துமாறு இந்தியா அழுத்தம் கொடுக் கும். இந்தியத் தலையீட்டின் பின்னர் தேர்தலை நடத்தும் முடிவுக்கு அரசாங்கம் வருவதற்குச் சந்தர்ப்பங்கள் உள்ளன. மாகாணசபைத் தேர்தலுக்காகவே நாம் காத்திருக்கின்றோம். அதனை நிச்சயம் நடத்தியாக வேண்டும். மாகாணசபைத் தேர்தல் நடத்தப்பட்டால் மக்களின் ஆத ரவு யாருக்கு உள்ளது என்பது தெரிய வரும் - என்றார். (அ-ம-44)

## நயினாதீவு...

செய்யப்பட்டுள்ளது. செய்யப்பட்டுள்ள மாற்றங்களின் அடிப்படையில், நயினா தீவிலிருந்து குறிகாட்டுவானுக்கான இறுதிப் படகுச் சேவை மாலை 5:30 மணிக்கும், குறிகாட்டுவானிலிருந்து நயினாதீவுக்கான இறுதிப் படகுச் சேவை மாலை 6 மணிக்கும் இடம்பெறுமென தனியார் படகு உரிமையாளர்கள் சங்கத் தினர் தெரிவித்துள்ளனர். (அ-ம-66)

## மோ.சைக்கிள்...

இளைஞர் படுகாயம் அடைந்துள்ளார்.
யாழ்ப்பாணம் - பொன்னாலையில் நேற்று இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. காரைநகர் மத்தியைச் சேர்ந்த கிருஸ்ண ராசா சாரங்கன் (வயது-20) என்பவரே உயிரிழந்தவராவார். சம்பவம் தொடர் பில் தெரியவருவதாவது:-
பொன்னாலைச் சந்தியிலிருந்து மாத கல் நோக்கி இரு இளைஞர்கள் மோட் டார் சைக்கிளில் பயணித்துக் கொண்டி ருந்தபோது அதிகரித்த வேகம் காரண மாக மோட்டார்சைக்கிள் வேகக் கட்டுப் பாட்டை இழந்து, வீதியோரத்தில் இருந்த பனையுடன் மோதி விபத்துக்கு உள்ளா கியுள்ளது. இதன்போது மோட்டார்சைக் கிளில் பயணித்த இளைஞர்களில் ஒரு வர் சம்பவ இடத்தில் உயிரிழந்தார். மற் றையவர் படுகாயங்களுடன் மீட்கப்பட்டு யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை யில் சேர்க்கப்பட்டுள்ளார். வட்டுக்கோட்டை பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ-ம-26-66)

## மணல்...

தலா 50 ஆயிரம் ரூபா வீதம் தண்டம் விதிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி தருமபுரம் பகுதியில் பொலி ஸார் முன்னெடுத்த சுற்றிவளைப்பில் மணல் கடத்தலில் ஈடுபட்ட இருவர் கைது செய்யப்பட்டனர். அவர்களுக்கு எதிராக கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டது. குற்றஞ்சாட் டப்பட்டவர்கள் தம்மீதான குற்றச்சாட்டை ஏற்றுக்கொண்டனர். இதையடுத்தே, அவர்கள் இருவருக்கும் தலா 50 ஆயி ரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது. (அ-ம-55)

## போக்குவரத்துக்கு...

கப்பட்டன. புதுக்குடியிருப்புப் பகுதிகளில் கட்டாக்காலி மாடுகளால் தொடர்ச்சியா கப் பல்வேறு விபத்துகள் ஏற்பட்டு வந் தன. இதையடுத்து, மாடுகளைக் கட்டி வளர்க்குமாறு பிரதேசசபையினரால் பல்வேறு சந்தர்ப்பங்களில் உரிய அறி வுறுத்தல்கள் வழங்கப்பட்டன. எனினும், தொடர்ச்சியாக பொதுமக்களின் போக்கு வரத்துக்கு இடையூறாகத் திரிந்த மாடு களே நேற்றுமுன்தினம் மடக்கிப் பிடிக்கப் பட்டுள்ளன.

65 மாடுகள் ஒரே இரவில் பிடிக்கப்பட் டுள்ள நிலையில், அவை தற்போது புதுக் குடியிருப்பு பிரதேசசபை வளாகத்தில் கட்டப்பட்டுள்ளன. மாடுகளை மீட்டுக் கொள்வதற்காக ஒரு மாட்டுக்கு 10 ஆயி ரம் ரூபா வீதம் தண்டப்பணம் செலுத்த வேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள் ளது. (அ-ம-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எப்ஸ்டீனின் ஆவணங்களால் ஆட்டங்காணும் உலக அரசியல்




**டக்கா, பெப்.10**

**அமெரிக்காவின் மறைந்த கோடீஸ்வரர் மற்றும் பாலியல் குற்றவாளியான ஜெப்ரி எப்ஸ்டீன் தொடர்பான 30 இலட்சம் பக்கங்களைக் கொண்ட இரகசிய ஆவணங்கள், 1.8 இலட்சம் புகைப்படங்கள் மற்றும் 2,000க்கும் மேற்பட்ட வீடியோக்கள் என்பன அமெரிக்க நீதித்துறையால் கடந்த வாரம் கடந்த ஜனவரி 30 முதல் பெப்ரவரி 7 வரை வெளியிடப்பட்டுள்ளன.**

2025ஆம் ஆண்டு இறுதியில் ஜனாதிபதி ட்ரம்ப் கொண்டுவந்த புதிய சட்டத்தின் கீழ் அவை வெளியிடப்பட்டுள்ளன. இன்று திங்கட்கிழமை முதல் அமெரிக்க நாடாளுமன்ற உறுப்பினர்கள் இந்த ஆவணங்களின் தணிக்கை செய்யப்படாத முழுமையான பிரதிகளை நேரில் பார்வையிட அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இந்த ஆவணங்களில் பல உலகத் தலைவர்கள், தொழிலதிபர்கள் மற்றும் திரைப்பிரபலங்களின் பெயர்கள் மற்றும் அவர்கள் எப்ஸ்டீனுடன் கொண்ட தொடர்புகள் குறித்த விவரங்கள் அடங்கியுள் ளன. அதேவேளை இந்த ஆவணங்கள் வெளியானதைத் தொடர்ந்து, பல உயர்மட்ட அதிகாரி கள் மற்றும் தொழிலதிபர்கள் தங்கள் பதவிகளை இராஜினாமா செய்துவருகின்றனர். அதேவேளை எப்ஸ்டீனின் பாலியல் கடத்தல் வலையமைப்பிற்கு உதவியவர்கள் அல்லது தெரிந்தே அமைதி காத்தவர்கள் மீது சட்டநடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை வலுத்து வருகிறது.

ஜெப்ரி எப்ஸ்டீன் ஒரு அமெரிக்க நிதித்துறைக் கோடீஸ்வரர். அவர் தனது ஆரம்பக் காலத்தில் ஆசிரியராக இருந்து, பின்னர் முதலீட்டுத்துறையில் பெரும் செல்வத்தைச் சம்பாதித்தார். எனினும் அவர் தனது செல்வத்துக் காக அறியப்பட்டதைவிட, உலகின் மிக முக்கியமான நபர்களுடன் (அரசியல்வாதிகள், தொழிலதி பர்கள், அரச குடும்பத்தினர்) கொண்டிருந்த நெருங்கிய தொடர்புகளுக்காகவே அதிகம் பேசப்பட்டார். எப்ஸ்டீன் மீது சுமத்தப்பட்ட மிக முக்கியமான மற்றும் கொடூரமான குற்றச்சாட்டு 'பாலியல் கடத்தல்' ஆகும்.

சிறுமிகளைப் பாலியல் துஷ்பிரயோ கம் செய்தமை தொடர்பான வழக்கில் குற்றவாளியாக தீர்ப்பளிக்கப்பட்ட ஜெப்ரி எப்ஸ்டீன், சிறையில் அடைக்கப்பபட்டிருந்த நிலையில் 2019ஆம் ஆண்டு உயிரிழந்தார். அவரின் பாலியல் குற்றங்களுக்கு உதவிய குற்றச்சா ட்டில் அவரது முன்னாள் காதலி கிஸ்லேன் மெக்ஸ்வெல் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியில் வைக்கப்பட்டுள்ளார்.

(ச-இ)

வேலையாட்கள் தேவை

யாழ். பிரதான வீதியில் அமைந்துள்ள
பிரபல வெதுப்பகம் ஒன்றிற்கு
Cake icing மற்றும் Cake
வேலைகளில் முன் அனுபவம் வாய்ந்த
வேலையாட்கள் தேவை.

தொடர்புகளுக்கு:-
077 350 0605, 076 534 3034

(CS/60692) J-1

காணி விற்பனைக்கு உண்டு

யாழ்ப்பாணம் வசாவிளான் பாடசாலை முன்பாக $1\frac{1}{2}$ பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

- பலாலி வீதி 50m தூரம்
- வசாவிளான் மத்திய கல்லூரி 150m தூரம்
- நிலப்பரப்பு, செம்மண் தரை, நண்ணீர் ஊற்று
- 18 அடி பாதையுடன் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு:- 074 029 2338
076 990 3039

(CS 31186) A

# கருப்பைவாய் புற்றுநோயைக் கண்டறிய புதிய சோதனை!

பீஜிங்,பெப்.10

கருப்பைவாய் புற்றுநோயைக் கண்டறிய தற்போது நடைமுறையில் உள்ள வலிதரும் 'பாப் ஸ்மியர்' முறைக்கு மாற்றாக, மாதவிடாய் இரத்தத்தைப் பரிசோதிக்கும் புதிய முறையைச் சீன ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்துள்ளனர். இது பெண்களின் ஆரோக்கியப் பராமரிப்பில் ஒரு மைல்கல்லாகக் கருதப்படுகிறது. புற்றுநோயை உண்டாக்கும் 'ஹியூமன் பாப்பிலோமா வைரஸ்' இருப்பதை இந்தப் புதியமுறை 100வீதம் துல்லியமாகக் கண்டறிகிறது.

20 முதல் 54 வயதுடைய 3,000க்கும் மேற்பட்ட பெண்களிடம் நடத்தப்பட்ட ஆய்வில், வழக்கமான மருத்துவப் பரிசோதனைகளுக்கு இணையான முடிவுகளை இது வழங்கியுள்ளது.

தற்போதைய புள்ளிவிவரங்களின்படி, மூன்றில் ஒரு பங்கு பெண்கள் வலி மற்றும் அசௌகரியம் காரண மாகப் புற்றுநோய் பரிசோதனையைத் தவிர்க்கின்றனர். இவர்களுக்கு இந்தப் புதிய முறை ஒரு வரப்பிரசாதமாக அமையும் எனப் புற்றுநோய்த் தொண்டு நிறுவனங்கள் நம்பிக்கை தெரிவித்துள்ளன. (ச-இ)

# ஷேக் ஹசீனாவுக்கு 10 ஆண்டுகள் சிறை

டக்கா,பெப்.10

பங்களாதேஷின் முன்னாள் பிரதமர் ஷேக் ஹசீனாவுக்கு இரண்டு வெவ்வேறு ஊழல் வழக்குகளில் தலா 5 ஆண்டுகள் எனமொத்தம் 10 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதித்து டக்கா சிறப்பு நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

டாக்காவுக்கு அருகிலுள்ள 'பூர்வாச்சல் புதிய நகரத்' திட்டத்தின்கீழ், அரசு நிலங்களை ஒதுக்கியதில் தனது அதிகாரத்தைத் தவறாகப் பயன்படுத்தியதாக ஷேக் ஹசீனா மீது குற்றஞ்சு மத்தப்பட்டது.

நில ஒதுக்கீட்டில் முறைகேடு செய்தமை மற்றும் சட்ட விதிகளை மீறியமை நிரூபிக்கப்பட்டதையடுத்து இந்தத் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

கடந்த 2024ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் பங்களாதேஷில் ஏற்பட்ட மக்கள் புரட்சியைத் தொடர்ந்து, ஷேக் ஹசீனா தனது பிரதமர் பதவியை இராஜினாமா செய்துவிட்டு இந்தியாவில் தஞ்சம் புகுந்துள்ளார். அவர் தற்போது இந்தியாவில் வசித்து வரும் நிலையில், இந்தத் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. (ச-இ)

மரண அறிவித்தல்

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 13 . 05 . 1954 | | 08 . 02 . 2026 |



முத்துக்குமாரு கணேசன் (ஓட்டுக்கார கணேசன்)

காரைநகர் ஆயிலியை பிறப்பிடமாகவும் முல்லைப்பிளவை வாழ்விடமாகவும் கொண்ட முத்துக்குமாரு கணேசன் (ஓட்டுக்கார கணேசன்) அவர்கள் நேற்று முன்தினம் (08-02-2026) ஞாயிற்றுக்கிழமை மாலை இறைவனடி சேர்ந்தார்

அன்னார் காலஞ்சென்றவர்களான முத்துக்குமாரு - தங்கமுத்து தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான தம்பிராசா - செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், தியாகலட்சுமி (தேவி) அவர்களின் பாசமிகு கணவரும், காலஞ்சென்றவர்களான சோமசுந்தரம், சரஸ்வதி மற்றும் மாணிக்கம் காலஞ்சென்ற திருநீலகண்டன் மற்றும் சபாரத்தினம், சுந்தரலிங்கம், சிவஞானம் (இளைப்பாறிய அதிபர்), விஜலட்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்றவர்களான நாகேஸ்வரி, சபாரட்னம் மற்றும் இராஜேஸ்வரி , தியாகராசா, திருச்செல்வம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (10-02-2026) செவ்வாய்க்கிழமை காலை 8.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக காரைநகர் சாம்பலோடை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும்
ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்

தகவல்:
மனைவி (தேவி) - 077 644 6522, 076 395 1530

(CS/60694) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 10.02. 2026 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.